www.tamilarangam.net

Raya

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE
ஜூன் & ஓகஸ்ட்
1992

இரவல் தாயகம்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

இரவல்: 3&4

# அரசியல் தீர்வு என்பது வெறும் கானல்நீர் தானா?

வட பகுதியில் இடம்பெறும் யுத்தத்திற்குத் தேவையான ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் கொண்டு சென்ற விமானம் மர்மமான முறையில் வெடித்துச் சிதறியதும், குடா நாட்டில் குறிப்பிட்ட இலக்குகளை நோக்கி ராணுவம் முன்னேறியுள்ளமையும் வட, கிழக்கு யுத்தகளத்தில் முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளாகக் கடந்த வாரம் இடம் பெற்றிருந்தன.

இந்த விமானத்தை தாமே சுட்டு வீழ்த்தியதாக புலிகள் உரிமை கோரியிருந்த போதிலும் கூட, இந்த விமானம் பறந்து கொண்டிருந்த உயரத்தின் அடிப்படையில் இதனை புலிகளின் எந்த ஒரு ஏவுகணையும் தாக்கியிருக்க முடியாதென விட்டுக் கொடுக்காமல் கூறி வருகின்றனர் ராணுவத்தினர்.

இந்த விமான விபத்திற்கு உண்மையான காரணம் என்னவாக இருந்தாலும், விமானமொன்றை சுட்டு வீழ்த்தக் கூடிய நிலையில் தாம் இருப்பதாக புலிகள் உரிமை கோருவது அவர்களுடைய மன வலிமையை மேலும் தூண்டி விடுவதாகவே இருக்கும்.

ராணுவத்தைப் பொறுத்த வரையில், ஏற்கனவே ஆள், ஆயுத பற்றாக்குறையால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் ஒரு விமானத்தை இழந்தது அவர்களுக்கு ஒரு பின்னடைவாகவே இருக்கும்.

ஏனென்றால் குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்களுக்காக மட்டுமன்றி "பீப்பாய்" குண்டுகளைப் போடுவதற்கும் இவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனைவிட ஆயுதங்கள், உணவுப் பொருட்கள், ராணுவச் சிப்பாய்களைக் கொண்டு செல்லவும், யுத்த களத்தில் காயமடைந்தவர்களை வெளியேற்றவும் இந்த விமானமே பயன்படுத்தப்பட்டு வந்தது.

இவ்வாறான இரண்டு விமானங்களே இலங்கையிடம் இருக்கின்ற போதிலும் அவற்றில் ஒன்று பழுதடைந்து பாவிக்க முடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. தற்போது இவ்வாறான புதிய விமானம் ஒன்றை வாங்குவதற்கு 20 மில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் 80 கோடி ரூபா) செலவிட வேண்டியிருக்கும் எனவும் ராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

"ஸ்ரிஞ்சர்" ஏவுகணை மூலம் 5,000 அடி உயரத்தில் பறக்கும் விமானத்தைச் சுட்டு வீழ்த்த முடியும் என்பதை ராணுவ ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ள போதிலும், புலிகளிடம் இவ்வாறான ஏவுகணை ஒன்று உள்ளதா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆப்கானிஸ்தான் கெரில்லாக் குழுக்களிடமிருந்து இவ்வாறான ஏவுகணையைப் பெறுவதற்குப் புலிகள் முயன்றதாக முன்னர் சில செய்திகள் வெளியாகி இருந்தன. ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகள் இருந்தபோது ஆப்கான் கெரில்லாக்களுக்கு அமெரிக்கா "ஸ்ரிஞ்சர்" ஏவுகணைகளை வழங்கி இருந்தது.

விமானத்தை புலிகள் சுட்டு வீழ்த்தவில்லை என்று ராணுவத் தரப்பில் திட்டவட்டமாக கூறப்படுகின்ற போதிலும், இந்த விமான விபத்துக்கான காரணத்தை அவர்கள் இன்னும் திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை. இதற்கான காரணத்தைக் கண்டறிவதற்கான குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இயக்கச்சியைப் படைகள் கைப்பற்றியிருப்பது புலிகளுக்கு ஒரு பின்னடைவாகவே இருக்கும். இது அவர்களுடைய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தளங்களில் ஒன்றென்பதும் குறிப்பிடத்தக்கது.

வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவு வரையான பகுதியை கைப்பற்றிய பின்னர் இயக்கச்சியையும் கைப்பற்றி இருப்பதன் மூலம் யாழ். குடா நாட்டை நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து துண்டித்து விடக் கூடிய நிலை ராணுவத்திற்கு ஏற்பட்டுள்ளது.

"பலவேகய - 11" நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ராணுவத்தினர் தமது நடவடிக்கைகளை இடை நிறுத்தாமல் அவர்களது இலக்கான யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறுவார்களா என்பதையிட்டு எந்த விதமான சமிக்ஞைகளும் இன்னும் கிடைக்கவில்லை.

அல்லது கடந்த இரண்டு வருட காலமாக இரு தரப்பினரிடையேயும் விட்டு, விட்டு நடைபெறும் சண்டை போல, இதனைத் தொடர்ந்து சண்டையில் ஒரு மந்தநிலை ஏற்படுமா என்பதும் தெளிவில்லாமலேயே உள்ளது.

வட-கிழக்கு யுத்தமானது நின்று நின்று வருகின்ற மந்த நிலைமைகள் மூலமாகவே கொண்டு செல்லப்படுகின்றது. பிரச்சினைக்கு முடிவொன்

(தொடர்ச்சி 30 ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அப்பா வருவாரா?

இலங்கையிலிருந்து



" அம்மா ... அம்மா சண்டை முடிஞ்சதாலை சித்தப்பா வெளி நாட்டிலையிருந்து நாளைக்கு வாறாராம்"

"எங்கட அப்பா எப்பம்மா வருவார்"

"நாங்கள் எங்கட வீட்டை எப்பம்மா போறம்"

குழந்தை சுபாவின் குரல் ராசாத்திக்குக் கேட்காமலில்லை. எல்லாக் கேள்விகளுக்கும் ஒரே பதில்.

"நீ போய் புத்தகத்தை எடுத்துப் படி"

"புத்தகம் ஒண்டும் இல்லையே"

அம்மாவை மடக்கிவிட்ட புழுகம் சுபாவுக்கு.

" சரி போய் விளையாடு"

சுபா தன் விளையாட்டுத் தோழர்களைத் தேடி முற்றத்துக்கு ஓடினாள்.

"எங்கடை அப்பாவும் வருவார் தானே"

இன்று விளையாட்டிலும் அப்பா வரவு ஆரவாரங்கள்தான்.

' நாளைக்கு சுபாவின் சித்தப்பா வருவதற்கு முன் நாங்கள் எங்கள் வீட்டுக்குப் போய்விட வேண்டும் '.

ராசாத்தியின் மனம் முடிவெடுத்தது.

சித்தப்பா வந்த பின், சுபாவின் அப்பா வருவாரா என்ற கேள்வியைத் தணிப்பது முடியாததாகவே போய்விடக் கூடும் என நினைத்திருக்க வேண்டும்.

தன் தகப்பனார் செல்லத்துரையரிடம் முடிவை ராசாத்தி சொன்ன போது பெரிதாக மறுப்பு இல்லை.

"ஊரிலையுள்ள வீடு வாசலும் அழிஞ்சு போகும்தானே பிள்ளை. அப்பிடி ஒண்டைக் கட்ட இப்ப எவ்வளவு வேணும்"

பொருளாதாரக் கண்ணோட்டத்தில் வீடு மீளலை அவர் ஆதரித்தார்.

அம்மா அழுகையுடன் விடை தந்தாள்.

பத்து மாத அகதி வாழ்வு முடிந்தது.

இனிப் புனர் வாழ்வு?

## என். சண்முகலிங்கன்

சகோதரி வீட்டில் அம்மா அப்பாவுடன் இருந்த போதிலும் அதனை அகதி வாழ்வாகவே ராசாத்தி உணர்ந்திருக்க வேண்டும்.

சைக்கிளுக்குக் காற்றடித்துக் கொண்டு, இளைத்தபடி செல்லத்துரையர் வருவதைப் பார்க்க ராசாத்திக்கும் மூச்சு வாங்கியது.

இந்த வயதிலும் அப்பாவுக்கு ஏன் இந்தக் கஷ்டம்.

முன் ' பாரில் ' சுபாவும் ராசாத்தியும், பின் ' கரியரில் ' சுதனும் ஏறிக் கொள்கின்றனர். செல்லத்துரையரின் பரம்பரை ' ரலி சயிக்கிள் ' அசைந்தது. ஒரு தவம் போல சைக்கிளை உழக்கினார் செல்லத்துரையர்.

கொத்தியால் சுடலையடி வரை யாரும் ஏதும் பேசவில்லை.

மௌனத்தை சுதன் கலைத்தான்.

"அம்மா.... அப்பம்மாவை இந்தச் சுடலையிலையே எரிச்சது? "

" பேசாமல் வாடா " பிள்ளைகளின் பேச்சு சுதந்திரத்தை ராசாத்தி மனவிருப்புடன் பறித்துக் கொள்ளவில்லை.

இயலாமை அடக்குமுறையாகியிருக்க வேண்டும்.

சுதன் மீளப் பேசவில்லை. ஆனாலும் ராசாத்திக்குள் நிறையப் பேச்சுக்கள்.... மாமியுடன் அவள் அர்த்தமில்லாமல் பிடித்த சண்டைகள்.

மாமியைத் தனி உலைக்குத் தள்ளி கஷ்டப்படுத்திய நிகழ்ச்சிகள்... நினைவில் வந்திருக்க வேண்டும்.

' மாமியின்ரை சாம்பலைக் கூட கீரிமலைக்கு கொண்டு போக முடியாமல் சுடலையில் அடையாளம் வைச்சுத் தாட்டுப் போட்டு வந்ததாக இவர் சொன்னாரே...'

வழமை போல மூளையை விறாண்டும் இவர் நினைவுகள்.

"இறங்குங்கோ...இனி சைக்கிளிலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போகேலாது. கிடங்குகள் ஒண்டும் மூடப்படயில்லை".

இறங்கி நடந்தார்கள்.

சுபா அம்மாவை உப்பு மூட்டை தூக்குமாறு அடம்பிடித்தாள்.

அடிதான் விழுந்தது.

செல்லத்துரையர் தன் தலையில் அடித்துக் கொண்டார்.

சுதன் தங்கச்சியைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டான்.

"அப்பா வந்தபிறகு உப்பு மூட்டை தூக்குவார்தானே" என்று அழுகையிடையேயும் அம்மாவுக்குச் சவால் விட்டாள் சுபா.

ராசாத்திக்கு இன்னமும் விசராக்கவில்லைத் தான்.

"அம்மா... அம்மா... விசர்க்கந்தையாவின்ரை பொலித்தீன் பேப்பர் சுருள்"

சுதன் தான் கண்டு பிடித்தது.

ஆண்டவனே அதற்கு அருகில் கிடக்கிற மண்டை ஓடு?

விசர்க்கந்தையாவின் மரணத்தை உறுதிப்படுத்த வேண்டிய தேவை யாருக்கு?

அவன் வரவை யார் பார்த்திருக்கிறார்கள்? வீட்டை அண்டிக் கொண்டிருந்தார்கள்.

யார் இது?

விசர்க்கந்தையா மாதிரியே நீளத் தாடியுடன் வீதியிலே....

"அது கணேசையா பிள்ளை"

செல்லத்துரையர் இப்ப தான் வாய் திறந்தார்.

விசர்க்கந்தையாவுக்குப் பிரதியீடா!

என்ன மாதிரி இருந்த ஐயர்?

செல்லத்துரையர் கணேசையாவுக்காக ஒரு பெருமூச்சு விட்டார்.

" ஓ! எங்கட வைரவரே...."

ராசாத்தி அப்படியே நிலத்தில் இருந்து விட்டாள்.

"எங்கையம்மா எங்கட வயிரவ கோயில்?"

கணேசையா விசர்க்கந்தையாவாகிய விடயம் இப்போது புரிந்தது.

' வளமாரி வைரவரே....! '

' ஓ அப்புவின்ரை குலதெய்வம் எண்டு மாமி அடிக்கடி சொல்லுவாவே...'

"உரிமையை விடக்குடாதெண்டு மாமியின்ரை தமையன் செத்த பிறகு இவரைக் கொண்டு தானே ஊஞ்சல் பாட்டு பாடுவிக்கிறவை".

எல்லா நினைவும் இவரில் முடியும். முடிவதென்ன? தொடரும்.

' துரையர், குஞ்சன் வீடெல்லாம் தரை மட்டம் '

"எங்கடை வீடு தெரியுதம்மா"

சுதனுக்கும் சுபாவுக்கும் வீட்டைக் கண்ட புழுகம். சுபா அண்ணனின் இடுப்பில் இருந்து இறங்கி ஓடத் தொடங்கினாள்.

"நில்லுங்கோடா! நிலத்திலை அவங்கள் புதைச்சதுகள் வெடிச்சாலும்".

செல்லத்துரையர் தான் அதட்டினார். பிள்ளைகள் செல்லத்துரையருக்கு கட்டுப் பட்டதுகள்.

செல்லத்துரையர் ஒரு தடியால் வழியில் இருக்கிற கஞ்சாலைத் தட்டியபடி முன்னாலே செல்ல, ராசாத்தியும் பிள்ளைகளும் பின் தொடர்ந்தனர்.

"இந்தியன் ஆமி செக் பண்ணினது தானாம். இருந்தாலும் ஸ்ரீலங்கா ஆமிக்காரங்கள் இருந்த வீடு, எங்கையேன் வைச்சிட்டுப் போயிருப்பாங்கள்".

செல்லத்துரையர் பேசியவை ராசாத்தியின் காதில் விழவில்லை.

அவள் கண்களில் ஆழமான தேடல்? எதைத் தேடுகிறாள்... எதைத் தேடுவாள்...? வீட்டினுள் எதுவுமில்லை.

' தலைமுறை தலைமுறையாகக் காக்கப்பட்டவைகள். ஒருவருக்குமே கொடுக்காமல், ஏன் மற்ற மருமக்களுக்குமே கொடுக்காமல் மாமி எனக்கெண்டு தந்ததுகள்.....'

ஊருக்கும் பள்ளிக்கூடம், வாசிகசாலை, சங்கக் கடை, கோயில் எண்டு கட்டின புண்ணியமாக்கும் மாமாவின்ரை வீடு மட்டும் மிஞ்சியிருக்கு. எண்டாலும் அவற்றை புண்ணியத்திலையும் ஏதோ குறை....

மாமாவை நொந்தென்ன?

அவருடைய பிரதிமை ' பெயின்ரிங் ' மட்டும் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. எங்கோ ஆண் பெண் குரல்கள் ஒன்றையொன்று ' கிளியக்கிளிய ' கேட்கிற சத்தங்கள்.

"பள்ளிக்கூட மதிற்கல்லுக்குச் சண்டை பிடிக்கிறாங்கள்"

செல்லத்துரையர் விளக்கம் தந்தார்.

"ஆமிக்காரன் சென்றிக்குப் போட்ட முள்ளுக் கம்பிக்குக்கூட சண்டை பிடிக்குதுகள்".

இந்தச் சத்தங்களில் ராசாத்தியின் கவனம் இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேடல்...
கண்டு கொள்ள விரும்பாத தேடல்...
ஆனாலும்,
கண்டுபிடித்து விட்டாள்.
எலுமிச்சையடியிலே...
"அம்மா அம்மா அப்பா எப்ப வருவாரம்மா..."

சுபா தான் கேட்பது. இங்கு வந்துவிட்டால் அந்தக் கேள்வி நின்றுவிடும் என ராசாத்தி எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்? உண்மையாக வெளிநாட்டுக்குப் போய் பாதுகாப்பாக இருந்த சுபாவின் சித்தப்பா, நாளைக்கு வந்து விடுவார்.

ஆனால் சுபாவின் அப்பா...

சுபாவைச் சமாதானப் படுத்தச் சொன்ன பொய் வெளிநாட்டிலிருந்து, எப்போ வரமுடியும்?

சிலவேளை இராணுவ முகாம்களில் வைத்திருக்கலாம், என்ற நம்பிக்கையும் பொய்த்துவிட்ட பிறகு....

'அண்டைக்கு ஆமிக்காரங்கள் வீட்டைச் சுற்றிவளைத்த போது எல்லாரும் ஒண்டாப் போய்த் துலைஞ்சிடாமல், சிதறி ஓடினதாலைதானே இண்டைக்கு எனக்கு அவல வாழ்வு....'

மீண்டும் வழமையான தடத்தில் சிந்தனை விறாண்டல்கள்...

"அம்மா சொல்லுங்கோ அம்மா.... அப்பா எப்ப வருவார்...."

சுபா மீண்டும் தாயின் முகத்தைத் தனக்கு நேரே திருப்பியவாறு கேட்டாள்.

எலுமிச்சையடியில் செல்லத்துரையர் பொலித்தீன் பை ஒன்றினுள், எரிந்து மிஞ்சிய எலும்புகளையும் தள்ளிக் கிடந்த மண்டையோட்டையும் சேகரித்துக் கொண்டிருந்தார்.

இறுதிக் கிரியைகளுக்காக இருக்க வேண்டும்.



மகன்: பெரிய குயீன் சைஸ் கட்டில் இருந்தும் ஏனம்மா அப்பா எப்போதும் கதிரையில் இருந்தபடியே தூங்குகிறார்?

தாய்: அவர் செக்கியூரிட்டி வேலையில் அப்படித் தூங்கித் தூங்கிப் பழகிவிட்டார்.

*தீவகன்*

(நான்காவது பரிமாணம் ஏப் '92)

# இரவல் தூண்டில்

**தொகுப்பு: கடலோடிகள்**

✉: THOONDIL
Südasien Büro
Grosse Heim Str. 58
4600 Dortmund 1
Germany

☎:(0231) 13 66 33
*(திங்+வெள்ளி: 16.00-21.00 மணி.
புதன் 14.00-17.00 மணி)*

## சந்தா

ஜேர்மனி: 6 மாதங்கள் = 20,- டி.எம்.
1 வருடம் = 38,- டி.எம்.

ஐரோப்பா:
6 மாதங்கள் = 25,- டி.எம்.
1 வருடம் = 48,- டி.எம்.

அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா:
1 வருடம் = 65,- டி.எம்.

அவுஸ்திரேலியா:
1 வருடம் = 75,- டி.எம்.

தபாற்கணக்கு இல. 308 07 468
Postscheckamt Dortmund
BLZ 440 100 46

---

*சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவிகளில் ஒன்றாக உங்கள் சந்தாவை அனுப்பி வைத்ததும் எமக்கு கடிதம் மூலம் அறிவியுங்கள்.*

---

*இத் தொகுப்பில் பிரசுரமாகும் கருத்துகள் யாவற்றுடனும் தொகுத்தவர்களுக்கு முழு உடன்பாடு இருக்க வேண்டுமென்பதில்லை.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையில் இந்திய(ர்) எதிர்ப்பியக்கம்

- வீ. ஏ. பாலன்

> இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்களை இலங்கையின் தேசிய அரசியல் நீரோடையில் இருந்து அப்புறப்படுத்தும் அரசியல் சதியில் சிங்கள தேசிய வாத தலைவர்கள் மத்தியில் கட்சி பேதங்களையெல்லாம் கடந்து நின்ற இந்திய(ர்) எதிர்ப்புணர்வின் மேலும் சில வெளிப்பாடுகளை இந்த இதழிலும் ஆராய்வோம்!

மலையகத் தமிழ் மக்களின் அரசியல் பிரவேசத்தையும், அவர் தம் அரசியல் பலத்தையும் ஆரம்பத்திலேயே அழித்தொழிக்கும் அரசியல் சதியின் வெளிப்பாடுகள் தான் 1948/1949ம் ஆண்டுகளில் சுதந்திர இலங்கையின் பாராளுமன்றத்தில் டி. எஸ். சேனநாயக்க தலைமையிலான அன்றைய ஐக்கிய தேசிய கட்சி நிறைவேற்றிய பிரஜாவுரிமை, வாக்குரிமை சட்டங்களாகும்.

இதன் மூலம் இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்கள் நாட்டின் அரசியல் நீரோட்டத்தில் இருந்து முற்றாகவே அப்புறப்படுத்தப்பட்டனர்.

சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றமும், ஆட்சி செலுத்திய ஐக்கிய தேசியக் கட்சியும் குடிபெயர்ந்து வந்து தமது ஈடிணையற்ற கடும் உழைப்பால் நாட்டைக் கட்டியெழுப்பிய ஒரு தொழிலாளர் பரம்பரையின், சிறுபான்மை இனத்தின் அரசியல் குரல்வளையை நெரித்து தமது (இந்தியர்) எதிர்ப்புணர்வையும், சிங்களமயக் கொள்கையையும் பட்டவர்த்தனமாக அம்பலப்படுத்தியது.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் அரசியல் பிரச்சினை இதன் மூலமே கூர்மை அடைந்தது.

பிரஜாவுரிமையையும், வாக்குரிமையையும் பறித்து இந்திய வம்சாவளி மக்களை தேசிய அரசியலில் சிறகிழந்த பறவைகளாக்கியதோடு சிங்கள பேரினவாதத் தலைவர்கள் திருப்தி அடையவில்லை.

இலங்கையில் லட்சக்கணக்கில் குடியேறியுள்ள இந்திய வம்சாவளி தமிழ் மக்களை எவ்வாறு இங்கிருந்து இந்தியாவிற்கு நாடு கடத்துவது? அவர்களுக்கான அரசியல் உரிமைகளை இலங்கையில் எவ்விதம் வழங்குவது? அல்லது அப்படியான அரசியல் உரிமைகளை எவ்விதம் வழங்காமல் விடுவது என்பன போன்ற விடயங்கள் குறித்து இலங்கை-இந்தியத் தலைவர்களிடையே சுதந்திரத்திற்கு முன்னரே நடைபெற்று பயனேதும் இல்லாமல் முடிவடைந்த பேச்சுவார்த்தைகள் 1950, 1953, 1954ம் ஆண்டுகளில் மீண்டும் தொடர்ந்து நடைபெற்றன.

இதற்கிடையில் 1949ம் ஆண்டு இந்திய பாக்கிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டு, இதனூடாக இலங்கைப் பிரஜாவுரிமைக்கான மனுக்கள் கோரப்பட்டன.

இதற்கு இரண்டு வருடகால அவகாசமும் வழங்கப்பட்டது.

இதனைப் பயன்படுத்தி 8,25,000 பேர் இலங்கை பிரஜாவுரிமை கேட்டு விண்ணப்பித்தனர். தமது மனித உரிமைக்கான அபிலாஷைகளை வெளிப்படுத்தினர்.

ஆனால், 1,34,168 பேர்களுக்கு மட்டுமே இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டது. இது மொத்த எண்ணிக்கையில் 16% சதவீதமாகும்.

ஏனைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

இந்தச் சட்டத்தின் அமுலாக்களின் அடிப்படையில் தான் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள், வம்சாவளி பிரஜை, பதிவுப் பிரஜை, நாடற்றவர் என்று மூன்று வகையாகப் பிரித்து வைக்கப்பட்டனர்.

பேரினவாத சிங்கள தேசிய தலைவர்கள் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் மீது கொண்டிருந்த கசப்புணர்வுகள் இதன் மூலம் தணிந்தபாடில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்வைத்த கோரிக்கைகள் பின்னர் கைவிடப்பட்டன

1948ம் 1949ம் ஆண்டுகளில் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் குடியுரிமை, வாக்குரிமை போன்ற வற்றை பறிப்பதற்காக கொண்டுவந்த மனித வுரிமை மீறல் சட்டங்களை அன்றைய இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் ஆதரித்தது யாவரும் அறிந்ததே!

இதன் பயனாகத்தான் அன்றைய இலங்கை தமிழ் காங்கிரஸ் அமரர் எஸ். ஜே. வி. செல்வநாய கத்தின் தலைமையில் பிளவுண்டு இலங்கை தமி ழரசு கட்சி மலர்ந்தது.

1956ம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றும் நோக் கத்தோடு S.W.R.D. பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் சட்டத்தை முன்வைத்தார்.

இதனை எதிர்த்து எஸ். ஜே. வி. செல்வநாய கத்தின் தலைமையிலான அப்போதைய இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கு-கிழக்கில் மாபெரும் சத் தியாக்கிரக போராட்டத்திற்கு முஸ்தீபுகளைச் செய்தது.

நாட்டில் அதிகரித்து வரும் அரசியல் நெருக்கடி யைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் S.W.R.D. பண்டாரநாயக்கா-செல்வநாயகத்துடன் ஒரு உடன் படிக்கையை செய்து கொண்டார்.

அதுவே பண்டா-செல்வா ஒப்பந்தமாகும்.

இந்த ஒப்பந்தத்திற்கு முன்னோடியாக இலங் கை தமிழரசு கட்சி 4 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்தது.

1. வட-கிழக்கு பிரதேசம் தமிழ் மக்களின் பாரம் பரிய பிரதேசமாக அங்கீகரித்தல்.
2. நாடு முழுவதற்கும் சிங்களத்துடன் தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து.
3. பிரதேச சபை
4. 10 லட்சம் இந்திய வம்சாவளி மக்களுக்கு குடி யுரிமை.

கோரிக்கைகள் தொடர்பாக நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது S. W. R. D. பண்டார நாயக்கா வடக்கு கிழக்கு பிரதேசம் தமிழ் மக்களின் பிரதேச மென்பதை அங்கீகரித்ததோடு, சிங்களத் துடன் தமிழ் மொழிக்கு நியாயமான அந்தஸ்து வழங் கவும் இணங்கினார்.

இதன் அடிப்படையில் பண்டா-செல்வா ஒப் பந்தம் கைச்சாத்தானது.

பிரதேச சபையுடன் 10 லட்சம் இந்திய வம்சா வளி மக்களின் குடியுரிமைக்கான கோரிக்கையை 1957ல் செல்வா கைவிட்டார்.

ஆதாரம்:
இந்திய வம்சாவளி மக்கள் கூட்டணி
பேராளர் மாநாட்டு அறிக்கை 1983

(முன்பக்கத் தொடர்ச்சி)

1949ம் ஆண்டு பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமைக்கு மனுச் செய்து நிராகரிக் கப்பட்ட 7,90,032 பேர்களின் விவகாரம் குறித்து சிங்களத் தலைவர்கள் தீவிரமாக சிந்திக்கலாயினர்.

இது குறித்து 1950ம், 1953, 1954ம் ஆண்டு களில் நடைபெற்ற இலங்கை இந்திய அரசுகளுக் கிடையிலான பேச்சு வார்த்தைகள் அனைத்தும் அதன் நோக்கத்தில் நிறைவு பெறாமல் தோல்வியில் முடிவுற்றன.

இறுதியாக 1964ம் ஆண்டு அப்போதைய இந்தி யப் பிரதமரும், காந்திய வழிமுறைகளில் அதித ஈடு பாடுடையவருமான லால்பகதூர் சாஸ்திரி அப்போ தைய இலங்கைப் பிரதமராகவிருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவும் இலங்கை வாழ் இந்தியர்கள் பிரச்சினைகள் குறித்து பேச்சு வார்த்தை நடாத்தி ஒரு உடன்பாட்டிற்கு வந்தனர்.

இதுவே ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தமாகும்.

இந்த ஒப்பந்தம் கூட சிங்களப் பேரினவாத தலைவர்களின் இந்திய(ர்) எதிர்ப்புணர்வின் மற்று மொரு வெளிப்பாடு தான் என்றால் அது மிகை யாகாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையின் வரலாற்றில்...

- 1795 இல் ஆங்கிலேயர் இலங்கையின் திருகோணமலையை கைப்பற்றினர்.
- 1802 இல் இலங்கை பிரித்தானியாவின் முடிக்குரிய குடியேற்ற நாடாகியது.
- 1832 இல் இலங்கையில் தமிழ் சிங்கள அரசாங்க பாடசாலைகள் மூடப்பட்டன.
- 1815 இல் மலையரட்டை ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது.
- 1892 இல் முஸ்லிம் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.
- 1898 இல் இலங்கையில் பௌத்த வாலிபர் சங்கம் உருவாக்கப்பட்டது.
- 1931 இல் இலங்கை மக்கள் அனைவருக்கும் வாக்குரிமை கிடைத்தது.
- 1948 இல் இலங்கை அந்நிய ஆட்சியினின்று சுதந்திரம் பெற்றது.
- 1972 இல் அந்நிய தொடர்புகளில் இருந்து விடுபட்டு குடியரசாகியது.
- 1978 இல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியை மக்கள் முதன் முதலாக தெரிவு செய்தனர்.

தொகுப்பு: உஷா சந்திரன்
அரஸ் பெத்த

அபேட்சகர்:
நீங்க இப்ப விவசாயம் செய்யிற நிலத்தில் தொடர்ந்து விவசாயம்பண்ணுங்கமுடிஞ்சா பக்கத்துல சும்மா கிடக்கிற நெலத்தையும் பலாத்காரமா கைப்பற்றுங்க பிரதேச சபை தேர்தல் முடிஞ்சவுடனே அந்த நிலங்களை உங்களுக்கே சொந்தமாக்கிடுறேன்.

வாக்காளர்:
நிலம் குடுக்கிறதுக்கும் பிரதேச சபைக்கும் என்னங்க சம்மந்தம்......

அபேட்சகர்:
சம்மந்தம் இருக்கு இல்லாட்டி ஏற்படுத்துவோம் போராடுவோம்... பயப்படாதீங்க...

வாக்காளர்:
நீங்க தேர்தலில வெற்றி பெற்றா தானே? - சித்ரா

வேட்பாளர்:
நான் யார் தெரியுமா...?

மக்கள்:
தெரியுங்க...

வேட்பாளர்.
எனது திறமைகள் தகைமைகள் சாதனைகள் பற்றி தெரியுமா...?

மக்கள்:
நல்லாவே தெரியுமுங்க...

அபேட்சகர்:
அப்ப உங்களின் வாக்கு......

மக்கள்:
நாங்க வாக்கற்றவர்கள்...... - சித்ரா

# எதிர்ப்பும் ஆதரவும்

1964ம் ஆண்டு ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்தானபோது அவ்வொப்பந்தம் சம்மந்தப்பட்ட மக்களையோ, அன்றி தலைமைகளையோ கலந்தாலோசிக்காமல் செய்யப்பட்ட மனிதாபிமானமற்ற ஒப்பந்தம் என இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான் எதிர்ப்புத் தெரிவித்தார்.

பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் 1967ல் நியமன அங்கத்தவராக பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகித்த திரு. எஸ். தொண்டமான் மேற்படி ஆண்டில் பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்ட ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்த அமுல் மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தார்.

ஆதாரம்:
இந்திய வம்சாவளி மக்கள் கூட்டணி
பேராளர் மாநாட்டு அறிக்கை 1983
தகவல்: - பாலன்.

(குன்றின் குரல், மார்ச்-ஏப்ரல்'91)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலக சினிமா சாதனையாளர்கள் – 1

# சார்லி சாப்ளின்

தி. கல்யாணராமன்,
விஜய்

சார்லி சாப்ளின். இந்தப் பெயரைக் கேட்டாலே சிரிப்பலைகள் எழும். உலகம் முழுவதையும் சிரிக்க வைத்தவர். பெரியவர், சிறியவர், ஏழை, பணக்காரர் என எல்லோராலும் போற்றிப் புகழப்பட்டவர். அவர் முதன் முதலில் நடித்து இன்று 87 ஆண்டுகள் ஆகிவிட்டன; அவர் மறைந்து 13 வருடங்கள் ஆகிவிட்டன; ஆனால் இன்றும் கூட அவர் நடித்த படங்களுக்குக் கூடும் கூட்டத்திற்கு குறைவில்லை. ஆயினும் இந்த உலகப் புகழ் பெற்ற கலைஞனின் வெற்றிக்குப் பின்னால் வறுமையும், போராட்டமும், சோதனைகளும், வேதனைகளும் நிறைந்த சோகக்கதை ஒன்று உள்ளது.

சர் சார்ல்ஸ் ஸ்பென்ஸர் சாப்ளின் 1889 ஆம் ஆண்டு ஏப்ரல் 16இல் லண்டனில் பிறந்தார். தந்தையின் பெயர்: சார்ல்ஸ் சாப்ளின்; தாய் ஹான்னா ஹில். இவர்களிருவரும் ஆடல், பாடல், நகைச்சுவை என பல்வேறு அம்சங்களைக் கொண்ட வாடெவில் (Vaudeville) கலைஞர்கள்; சாப்ளினுக்கு ஒரு வயதாகும் போதே பிரிந்து வாழத் தொடங்கியவர்கள். நாடகங்கள் நடத்துவதற்காக தாய் ஹான்னா ஹில் பல்வேறு இடங்களுக்குச் சென்றபோதெல்லாம் சாப்ளினும் அவருடன் செல்வார். இதனால் மிகச் சிறு வயதிலேயே நாடக மேடைச் சூழ்நிலைகளைக் கிரகிக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

மெஸ்யுர் வர்து



அப்போது சார்லிக்கு வயது 5. அவருடைய தாய் மேடையில் நடித்துக் கொண்டிருந்த போதே குரல் உடைந்துவிட்டது. அவருக்கு பதிலாக சார்லியே நடிக்கவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டது. அதைப் பற்றி அவரே பின்வருமாறு கூறுகிறார்: "கண்களைக் கூசும் மேடை விளக்குகளின் வெளிச்சத்தில், புகை சூழ்ந்த அரங்கத்தில் தெரியும் முகங்களுக்கு முன்னால் ஆர்கெஸ்ட்ரா புடைசூழ நான் பாடத் தொடங்கினேன்... பாடிக்கொண்டிருக்கும் போதே மேடையில் பணமழை பொழிந்தது. உடனே பாடுவதை நிறுத்திய நான் முதலில் பணத்தைப் பொறுக்கியெடுத்துக் கொண்டு பிறகு பாடுவதாக அறிவித்தேன். அரங்கினுள் ஒரே சிரிப்பு!! மேடை நிர்வாகி ஒரு கைக்குட்டையைக் கொண்டு வந்து கொடுத்து பணத்தைச் சேகரிப்பதற்கு உதவினார். அப்பணத்தினை அவரே வைத்துக் கொள்வார் என்று நினைத்த நான் அதை ரசிகர்களிடமும் கூறிவிட்டேன். இது மீண்டும் சிரிப்பைக் கிளப்பியது. அந்த நிர்வாகி பணமுடிப்புடன் மேடையை விட்டு இறங்கி நடக்க, நான் ஆர்வம் கலந்த சந்தேகத்துடன் அவரைப் பின்தொடர... ரசிகர்களின் சிரிப்பு அதிகமாகியது. அவர் பணத்தை என் தாயிடம் கொடுக்கும் வரை நான் மேடைக்கு திரும்பவில்லை. மேடையில் நான் மிகவும் சகஜமாக இருந்தேன். நான் ரசிகர்களுடன் பேசினேன் ஆடினேன். பிறரைப் போல் நடித்துக் காட்டினேன். என் தாய் பாடுவதைப் போலவே ஒரு ஐரிஷ் மொழிப் பாடலைப் பாடினேன். அதில் கோரஸ் வரும்போது, என் தாயின் உடைந்த குரலை மிகவும் அப்பாவித்தனமாக நகல் செய்தேன். அது ரசிகர்களிடையே ஏற்படுத்திய கலகலப்பைக் கண்ட எனக்கே ஆச்சரியமாக இருந்தது. அவர்கள் சிரித்து ஆரவாரம் செய்து மேலும் மேலும் மேடை மீது பணத்தை வீசியெறிந்தனர். என்னைத் தூக்கிச் செல்வதற்கு என் தாய் மேடைக்கு வந்தபோது அரங்கமே கைதட்டலால் அதிர்ந்தது. அந்த இரவில்தான் நான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலில் அரங்கேறினேன். அதுதான் என் தாயின் கடைசி மேடைத் தோற்றமாகவும் இருந்தது.

"மனித வாழ்க்கையில் விதி குறுக்கிடும் போது இரக்கமோ, நியாயமோ இருப்பதில்லை. என் தாயின் விஷயத்திலும் அப்படித்தான்."

தாயின் மேடை வாழ்க்கை நின்றது. தந்தையும் மரணமடைந்தார். இதனால் கொஞ்ச நஞ்சம் கிடைத்துவந்த வருமானமும் நின்றுபோனது. சார்லி, அவருடைய மூத்த சகோதரர் சிட்னி (சார்லியின் தாயாருடைய முதல் திருமணத்தில் பிறந்தவர்) ஆகியோருடைய வாழ்க்கையில் வறுமை புகுந்தது. தாய்க்கு முற்றிலும் மனநிலை பாதிக்கப்பட்டதால் ஒரு மனநோய் விடுதிக்கு அனுப்பப்பட்டார். இரு சிறுவர்களும் முதலில் தெருக்களில் நடனமாடிப் பிழைத்தனர். பின்னர் இருவரும் அனாதை ஆஸ்ரமத்தில் சேர்க்கப்பட்டனர்.

வறுமையைப் பற்றி சாப்ளின் கூறுகிறார்: "வறுமை நிலையைக் கவர்ச்சிகரமான ஒன்றாகக் காட்டும் போக்கு எனக்கு வெறுப்பை ஏற்படுத்துகிறது. வறுமையை நினைவுகூர்ந்து அதில்தான் சுதந்திரமாக இருந்ததாகக் கூறும் ஓர் ஏழையை இன்றுவரை நான் பார்த்ததில்ல. என்னைப் பொறுத்த வரை வறுமை என்பது கவர்ச்சிகரமானதோ, மனிதனை உன்னதமாக்கும் ஒன்றோ அல்ல. சமூக கொள்கைகளை சிதைப்பதைத் தவிர வறுமை எனக்கு வேறு எதையும் கற்றுத்தரவில்லை. பணக்காரர்கள் மற்றும் யோக்யமானவர்கள் என்று போற்றப்படும் வர்க்கத்தினரின் மிகைபடுத்தப்பட்ட பண்புகளை அறியும் நோக்கை வறுமை எனக்குக் கற்றுத் தந்தது."

அனாதை ஆஸ்ரமத்திலிருந்து வெளியே வந்த சாப்ளின் மீண்டும் அத்தகைய ஒரு இடத்திற்குச் செல்வதில்லை என்பதில் உறுதியாக இருந்தார். அங்கங்கே கிடைக்கும் வேலைகளைச் செய்து பிழைக்க முயற்சி செய்தார். தெருக்களில் அலைந்து திரிந்து சிறு பொருட்களை விற்பது, கண்ணாடித் தொழிற்சாலையில் ஊதும் வேலை, பழைய துணைகளை விற்பது, கட்டிடங்களைப் பராமரிப்பது ஓட்டல்களில் சர்வர் என பலவிதமான பணிகளைச் செய்தார்.

1901 ஆம் ஆண்டில்தான் முதன் முதலில் நாடகம் ஒன்றில் நடித்தார். அதற்குப் பின் வந்த நான்கு ஆண்டுகள் லண்டன் மற்றும் சுற்றுப்புறங்களில் நாடகங்கள் நடத்திவந்த மேடைக் குழுவில் பணியாற்றினார்.


தன் 17ஆவது வயதில், பிரெட் கார்னோ நாடகக் கம்பெனியில் சாப்ளின் சேர்ந்தார். சார்லியின் சகோதரர் ஏற்கெனவே இந்தக் கம்பெனியின் நகைச்சுவை நடிகராகப் பிரபலமடைந்திருந்தார். இக்கம்பெனியிலிருந்த பல குழுக்கள் இங்கிலாந்திலும் வெளிநாடுகளிலும் நாடகங்கள் நடத்தி வந்தன. 1910 மற்றும் 1912 ஆம் ஆண்டுகளில் இக்குழுவினரோடு அமெரிக்கப் பயணம் செய்தார் சாப்ளின். இரண்டாவது முறை அமெரிக்கா சென்றபோது, கீஸ்டோன் (Keystone) சினிமா கம்பெனியைச் சேர்ந்த மார்க் சென்னெட் என்ற பெண் இயக்குநர் சாப்ளினின் திறமையைக் கண்டு உடனடியாக அவரை நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்தார்.

இந்த கீஸ்டோன் படக் கம்பெனி ஸ்லாப்ஸ்டிக் காமெடி எனப்படும் நகைச் சுவைப் படங்களைத் தயாரிப்பதில் முன்னணியில் இருந்த ஒன்றாகும். ஏற்கெனவே இக்கம்பெனியிலிருந்த ஃபோர்ட் ஸ்டெர்லிங் (Ford Sterling) என்ற நகைச்சுவை நடிகர் தன்னுடைய சொந்த படக் கம்பெனியைத் தொடங்குவதற்காக அங்கிருந்து வெளியேறிவிட்டார். ஒப்பந்தப்படி சாப்ளினுக்கு முதல் மூன்று மாதங்கள் 150 டாலர்களும் மீதியுள்ள ஒன்பது மாதங்களுக்கு 175 டாலர்களும் சம்பளமாகக் கொடுக்கப்பட்டது.

சென்னெட்டின் இயக்கத்தில் **மாபெல்ஸ் ஸ்ட்ரேன்ஜ் ப்ரெடிகாமெண்ட்** (Mabel's Strange Predicament) என்ற படத்தில் சாப்ளின் நடித்தார். அப்படம் வெளியானதும் ஒருவித பயம் கலந்த சந்தேகத்துடன் ரசிகர்களிடையே அமர்ந்து அதைப் பார்த்தார். சாப்ளின் முதலில் தோன்றியபோது ரசிகர்களிடையே ஒரு இறுக்கமான அமைதி நிலவியது. ஆனால் போகப்போக சாப்ளினின் நடிப்பைக் கண்டு பெரும் சிரிப்பு எழுந்தது. இதைப் பற்றி சாப்ளின் கூறினார்: "ரசிகர்கள் புதுமுகம் என்பதால் ஒரு நடிகரிடம் பாரபட்சம் காட்டுவதில்லை என்பதை புரிந்து கொண்டேன்."

மாபெல் நார்மண்ட் (Mabel Normand) என்ற இயக்குனரின் 12வது படத்திற்கு உதவியாளராகப் பணியாற்றிய சாப்ளின், அவ்வியக்குனரின் **காட் இன் தி ரெய்ன்** (Caught in the Rain)

மாடர்ன் டைம்ஸ்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

என்ற 13வது படத்தை தானே இயக்கினார். சாப்ளின் இயக்குனராகப் பணியாற்றிய ஆரம்ப நாட்களைப் பற்றிக் குறிப்பிடும் முன், தன் குழந்தைப் பருவத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றி அவர் கூறுவதைப் பார்ப்பது அவசியம்.

''அந்நாளில் நடந்த ஒரு நிகழ்ச்சி தெளிவாக நினைவிருக்கிறது. எங்கள் தெருவின் ஒரு கோடியில் ஆடுகளை வெட்டுமிடம் ஒன்று இருந்தது. பலியாகப்போகும் ஆடுகளை எங்கள் வீட்டின் வழியாகத்தான் இழுத்துச் செல்வார்கள். ஒரு நாள் ஒரு ஆடு தப்பித்து ஓடியது. தெருவில் போய்க்கொண்டிருந்தவர்களுக்கு இது வேடிக்கையாக இருந்தது. சிலர் ஆட்டினைப் பிடிக்க முயன்றனர். பலர் தடுமாறி விழுந்தனர். அந்த ஆட்டின் பதற்றத்தையும், தவிப்பையும் கண்டு எனக்கு ஒரே சிரிப்பாக இருந்தது. அது அவ்வளவு வேடிக்கையாக இருந்தது. ஆனால் அந்த ஆட்டினை மீண்டும் கொலைக்களத்திற்குப் பிடித்துச் செல்லும்போதுதான் அந்நிகழ்ச்சியின் சோகம் எனக்குப் புரிந்தது. நான் உடனே வீட்டிற்குள் ஓடினேன். என் தாயிடம் கதறி அழுதேன். 'அவர்கள் அதைக் கொல்லப் போகிறார்கள், கொல்லப் போகிறார்கள்,' என்று கதறினேன். அந்த வசந்த கால மதியப் பொழுதின் காட்சி என் மனதில் பலநாட்கள் இருந்தது. சோகமும், நகைச்சுவையும் கலந்த அக்காட்சி எதிர்காலத்தில் என் படங்களுக்கு அடிப்படையாக இருந்திருக்குமோ என எண்ணி வியக்கிறேன்.''

முதன் முதலில் ஒரு படத்தை இயக்கும் வாய்ப்பு சந்தர்ப்பவசமாகத்தான் கிடைத்தது. அவர் மாபெல் நார்மண்ட் படப்பிடிப்பில் பணியாற்றிக் கொண்டிருந்த போது ஒரு கடுமையான வாக்குவாதம் எழுந்தது. இதனால் சாப்ளினை நீக்கிவிட சென்னெட் தயாராகிக் கொண்டிருக்கும் போதே கம்பெனியின் நியூயார்க் நகர அலுவலகத்திலிருந்த ஒரு தந்தி வந்தது. சப்ளின் படங்களுக்கு பெரும் வரவேற்பு இருப்பதால் மேலும் அதிக படங்களை அனுப்புமாறு அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. உடனே சென்னெட் சாப்ளினோடு சமரசம் செய்துகொள்ள முயன்றபோது, சென்னெட்டின் அடுத்த படத்தை இயக்க சாப்ளின் முன்வந்தார். இதற்கு டெபாசிட் தொகையாக 1500 டாலர்களையும் சாப்ளின் கொடுத்தார்.

தி கிரேட் டிக்டேடர்



அந்த நாட்களைப் பற்றி சாப்ளின் பின்வருமாறு எழுதுகிறார்: ''பட இயக்கம் என்பதன் செய்முறைகள் அந்த நாட்களில் எளிமையானவையாக இருந்தன. இடதுபக்கம் எது வலதுபக்கம் எது என்று தெரிந்திருந்தாலே கதாபாத்திரங்கள் காட்சிக்குள் வருவதையும், போவதையும் அமைத்துவிடலாம். ஒரு கதாபாத்திரம் காட்சியிலிருந்து வலது பக்கமாக வெளியேறினால் அடுத்த கதாபாத்திரம் இடதுபக்கமாக உள்ளே வரவேண்டும்; காமெராவை நோக்கி வந்து ஒருவர் வெளியேறினால், அடுத்தவர் காமெராவுக்குத் தன் முதுகைக் காண்பித்தபடி உள்ளே செல்ல வேண்டும். இருந்தாலும் இவையெல்லாம் அடிப்படையான விதிகளாகும்.

''காமெராவை வைக்கும் இடத்தைப் பொறுத்து காட்சி மனோரீதியாக அமைவது மட்டுமின்றி, அது தெளிவாக விளக்கப்படுவதாகவும் இருக்கிறது என்பதை அனுபவத்தின் மூலம் அறிந்து கொண்டேன்; உண்மையில் அதுதான் சினிமாவின் அடிப்படை. காமெராவை மிக அருகில் வைப்பதனாலோ வெகு தொலைவில் வைப்பதனாலோ ஒரு காட்சியின் தாக்கத்தை அதிகமாக்கவோ, பாழாக்கவோ முடியும். காமெரா அசைவுகளில் சிக்கனம் இருப்பது அவசியமென்பதால், விசேஷ காரணமேதுமில்லாமல் ஒரு நடிகர் தேவையற்ற ஒரு தூரத்திற்கு நடக்க வேண்டியதில்லை. ஏனெனில் நடப்பது என்பது உணர்ச்சியூட்டும் செயலல்ல. எனவே காமெராவை வைப்பதென்பது திரைப்பட அமைப்பிற்கு உதவுவதாகவும் நடிகர் உள்ளே வருவதை நளினமாகக் காட்டுவதாகவும் இருக்க வேண்டும். அது படத்தின் தேவைக்கேற்றாற்போல் மாற்றப்படக் கூடியது. லாங் ஷாட் (Long shot)ஐ விட க்ளோஸ்–அப் (close-up) இல்தான் காட்சிக்கு அதிக அழுத்தம் கிடைக்கும் என்று எவ்வித விதியும் இல்லை. க்ளோஸ்–அப் என்பது உணர்ச்சியைப் பொறுத்தது; சில நேரங்களில் லாங் ஷாட்டின் மூலம் அதிகமான அழுத்தத்தைக் கொடுக்கலாம்.

''இதற்கு உதாரணமாக **ஸ்கேடிங்** (Skating) என்ற என்னுடைய ஆரம்பகால நகைச்சுவைப் படத்தை எடுத்துக் கொள்ளலாம். இப்படத்தில் டிராம்ப் ஒற்றைக் காலைத் தூக்கிக் கொண்டு ஸ்கேடிங் செய்கிறான். அவன் சரிந்தும், திரிந்தும், மக்கள் மீது விழுந்தும் செய்த குறும்புகளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளைவால் காமெராவுக்கு முன்னுள்ள அந்த ஐஸ் பரப்பில் பலர் விழுந்து கிடக்கின்றனர். ஆனால் அவன் தொடர்ந்து ஸ்கேட் செய்து கொண்டே சென்று, காமெராவில் ஒரு சிறிய உருவமாகி கடைசியில் பார்வையாளர்களி டையே அமர்ந்து தான் உண்டாக்கிய குழப் பத்தை அப்பாவித்தனமாகக் காண்கிறான். அவன் உருவம் தொலைவில் சிறிதாகத் தெரிந்த போதிலும் கூட குளோசப் ஷாட்டைவிட அதிக வேடிக்கையாகவே தோன்றுகிறது.''

இப்படித்தான் சாப்ளினின் திரையுலக வர லாறு துவங்கியது. அவர் இயக்கிய முதல் படம் பிரமாதமான ஒன்றாக இல்லையென்ற போதி லும் மிகவும் நகைச்சுவையானதாக இருந்தது. அது வெற்றியும் பெற்றது. அப்போதிலிருந்தே தன்னுடைய நகைச்சுவைப் படங்களை சாப்ளின் தானே இயக்கத் தொடங்கினார். ஒவ்வொரு படத்துக்கும் போனஸ்ாக 25 டாலர்களும் பெற் றார்.

அவர் கீஸ்டோன் கம்பெனியில் இருந்த போது 35 படங்களை இயக்கினார். மிகவும் பிரபலமான நகைச்சுவை நடிகராக விளங்கிய தால், அவரால் அதிகமான ஊதியம் பெறமுடிந் தது. 1915 ஆம் ஆண்டில் எஸ்ஸானே என்ற திரைப்படக் கம்பெனியிடமிருந்து ஒரு வாரத் திற்கு 1250 டாலர்களும், 10000 டாலர்கள் போன ஸாகவும் பெற்றார். இக்கம்பெனியிடமிருந்த ஒப் பந்தம் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட போது வாரத் திற்கு 5000 டாலர் அவருக்கு கிடைத்தது. சாப் ளின் 1916ஆம் ஆண்டின் மத்தியில் மியூசுவல் (Mutual) என்ற படக் கம்பெனியில் சேர்ந்தார். ஒரு வருடத்திற்கு 12 படங்கள் உருவாக்க அவ ருக்கு ஒரு வாரத்திற்கு 10,000 டாலர்களும், போனஸாக 1,50,000 டாலர்களும் அளிக்கப்பட் டன.


பின்னர், ஃபர்ஸ்ட் நேஷனல் என்ற கம்பெ னியுடன் 2 ரீல்களைக் கொண்ட எட்டு படங்க ளைத் தயாரிப்பதற்கான ஒப்பந்தம் செய்து கொண்டார். இதற்கு அவர் பெற்ற தொகை பத்து லட்சம் டாலர்கள்! இந்தக் காலகட்டத்திற் குள் திரைப்படத் தயாரிப்பில் தன் திறமையை மேலும் வளர்த்துக் கொண்டார். ஒரு சிறிய செய்கையின் மூலம் சிரிப்பை அழுகையாக மாற் றும் ஆற்றல் பெற்றார் சாப்ளின். இந்தக் கால கட்டத்தில்தான் (1918) ஷோல்டர் ஆர்ம்ஸ் (Shoulder Arms) என்ற படத்தை இயக்கினார். இது போரைப் பரிகசித்து எடுக்கப்பட்ட படமாகும். 1921–ஆம் ஆண்டு தி கிட் (The Kid) என்ற முழுநீளப் படத்தை உருவாக்கினார். தற்கால சினிமாவின் ஒரு திருப்புமுனையாக அமைந்த இப்படம் அவருடைய மிகச் சிறந்த படைப்பு என்ற பாராட்டைப் பெற்றது. தன் படங்களில் சென்டிமென்டைப் புகுத்தும் அவருடைய மனோபாவம் வெளிப்பட்டதும் இப்படத்தில் தான்.

சாப்ளின் ஒரு உலகப் புகழ்பெற்ற கலைஞ ரானார். இதனைப் பற்றி அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''பணமும், புகழும் வந்தபோது, வழக்கத் திற்கு மாறாக, இவ்வுலகை சரியான நோக்கில் காண்பதற்கு நான் கற்றுக் கொண்டேன். உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கும் மனிதர்கள் கூட மற்றவர் களைப் போலக் குறைபாடுகள் உடையவர்கள் தாம் என்பதனை நான் அவர்களின் அருகில் சென்ற போது கண்டு கொண்டேன். வாளும், கைத்தடியும், குதிரைச் சவாரிக்காகக் கையில் வைத்திருக்கும் சாட்டையும் பகட்டின் சின்னங் கள் என்பதையும் புரிந்துக் கொண்டேன். ஒரு மனிதனின் அறிவையும், திறமையையும் அவனு டைய மொழி உச்சரிப்பை வைத்து அளப்பது மடமை என்பதனையும் அறிந்தேன். கல்வியி னாலோ, இலக்கிய பரிச்சயத்தினாலோ மட்டும் அறிவு வளர்ந்து விடாது என்பதையும் உணர்ந்து கொண்டேன்.''

சார்லி சாப்ளின் 1991–ஆம் ஆண்டு யுனை டெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பரேஷன் என்ற கம் பெனியை ஸ்தாபித்தார். 1925ஆம் ஆண்டில் அவ ருடைய சிறந்த படம் எனப் பலராலும் கருதப் படும் கோல்ட் ரஷ் (Gold Rush) ஐ உருவாக்கி னார். அவருடைய படங்களிலேயே மிகவும் அரு மையான சோகம் மற்றும் நகைச்சுவைக் காட்சி களைக் கொண்டிருந்தது இப்படம். தன்னுடைய காலணிகளையே உணவாக உட்கொள்ளும் காட்சி நெஞ்சைவிட்டு அகலாத ஒன்று. தன்னு டைய நடிப்பாற்றலின் மூலம், உணவு உண்ணும்

தி கிட்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போது கடைப்பிடிக்க வேண்டிய நாசுக்கான உணவருந்தலை (table manners) சிறிதும் பிசகின்றிச் செய்வார் சாப்ளின். வறுமையில் வாடும் ஊர் சுற்றியாக இருந்த போதிலும் தான் ஒரு ஜென்டில்மேன் என்பதை இக்காட்சியில் ஒரு பரிகாசமாகக் காட்டுகிறார் சாப்ளின். அவர் காலணியைத் தின்னும் போது விரல்களில் க்ரீஸ் வழிவதை ரசிகர்களும் உணரும் வகையில் தத்ரூபமாகச் செய்வார். அவர் ஒரு விசிலை விழுங்கும்போது விடும் ஒவ்வொரு ஏப்பத்திற்கும் ரசிகர்களின் சிரிப்பை மட்டுமின்றி அனுதாபத்தையும் பெற்றுவிடுவார். இரண்டு ரொட்டித் துண்டுகளை வைத்துக் கொண்டு பாலே (Ballet) நடனம் ஆடும்போது நம்மைப் பரவசத்திலாழ்த்துவதோடு மட்டுமல்லாமல் உண்மையற்ற ஒன்றின் எதார்த்தத்தை உணரவைப்பார்.

எழுத்து, நடிப்பு, திரைப்பட இயக்கம் என பலதுறைகளிலும் அவர் திறமை பெற்றிருந்ததைப் பாராட்டும் வகையில் 1927 ஆம் ஆண்டு சாப்ளினுக்கு ஒரு சிறப்பு ஆஸ்கார் விருது வழங்கப்பட்டது.


ஒவ்வொரு அவஸ்தையிலிருந்தும் தன்னுடைய அசாதாரணத் திறமை மூலம் எவ்வாறு அவர் மீண்டு வருகிறார் என்பதே ரசிகர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கும் ஒரு விஷயமாகும். இதற்காக அவர் கையாளும் உத்திகளுக்கு பஞ்சமேயில்லை. எப்படிப்பட்ட பொருளாயிருந்தாலும் அதனை ஒரு ஆயுதமாகவோ அல்லது தப்பித்துக் கொள்வதற்கான உபகரணமாகவோ அவர் பயன்படுத்திக் கொள்வார். மற்ற எல்லா மனிதர்களையும் கட்டுப்படுத்தும் உடல்ரீதியான விதிகளை மிகதுச்சமாக மதித்து மீறுவது போலிருக்கும் அவருடைய அசைவுகள். சில பிரமாதமான கணங்களில் அவருடைய அசைவுகள் நடனம் என்ற நிலையை அடைந்து இசையுடன் இயைந்து விடும். அவருடைய நகைச்சுவை பெரும்பாலும் காட்சியின் நம்பும் தன்மையை சார்ந்துதான் இருக்கும். அதுவே அவரது படங்களின் வெற்றிக்கு காரணமாகும். சினிமாவில் ஒலியின் வருகை சாப்ளினுக்கு பிரச்சினையை ஏற்படுத்தியது. அவரது கலையின் சாரமே பாவனையென்பதால் தொழில்நுட்ப குறைபாடாக அவரது படங்களில் மௌனம் திணிக்கப்பட்டிருக்கவில்லை.

ஆயினும், நண்பர்களின் எச்சரிக்கைகளையும் மீறி, **சிட்டி லைட்ஸ்** (City Lights) (1931) என்ற ஊமைப் படத்தை உருவாக்கினார். இதில் ஒலி–எபெக்ட்ஸ் மற்றும் இசைக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டது. (தன்னுடைய படங்கள் எல்லாவற்றிற்குமே சாப்ளின் தானே இசையமைத்தார்.)

ஐந்து ஆண்டுகளுக்குப் பின் **மாடர்ன் டைம்ஸ்** (Modern Times) (1936) என்ற படத்தை சாப்ளின் இயக்கினார். அவருடைய படங்கள் பெரும் வெற்றியைப் பெற்றபோதிலும், வசனத்தின் இன்றியமையாமையை உணர்ந்த சாப்ளின் 1940 ஆம் ஆண்டு **தி கிரேட் டிக்டேடர்** (The Great Dictator) என்ற படத்தை உருவாக்கினார். ஃபாசிசத்தை நையாண்டி செய்யும் இப்படத்தில் யூத இனத்தைச் சேர்ந்த நாவிதனாகவும், ஹிட்லரைப் போன்ற ஒரு கேலிப் பாத்திரமாகவும் இரட்டை வேடத்தில் நுணுக்கமாக நடித்தார் சாப்ளின். அவர் நாடோடியாகப் படத்தில் தோன்றியது இதுவே கடைசிமுறையாகும். சாப்ளினுடைய அடுத்த படம் 1947இல் தயாரிக்கப்பட்ட **மெஸ்யுர் வர்து** (Monsieur Verdoux). சில தவறுகளால் தோன்றும் நகைச்சுவைச் சம்பவங்களைக் கொண்ட இப்படத்தில் சார்லி சாப்ளின் மனைவிகளைக் கொல்லுபவனாக நடிக்கிறார். ஆனால் உண்மையில் சமாதானம்தான் இப்படத்தின் செய்தி.

மாடர்ன் டைம்ஸ் படத்திலிருந்தே அவருக்கு தொல்லைகள் தொடங்கின. இயந்திரங்கள் முதன் முதலில் தோன்றிய காலகட்டத்தினைக் கிண்டல் செய்து எடுக்கப்பட்ட இப்படம் பழமைவாதிகளுக்கு எரிச்சலூட்டியது. இதேபோல் தி கிரேட் டிக்டேடரின் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த நேரத்தில் அப்படத்தை முடிக்க வேண்டாம் என்றும் ஆலோசனை கூறப்பட்டது. ஆனால் சாப்ளின் உறுதியாக இருந்தார்.

ஷோல்டர் ஆர்ம்ஸ்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று அவருடைய யுத்த எதிர்ப்புணர்வு. "தேசபக்தி என்ற பெயரில், யாரைக் கொல்வது எதற்காக உயிரை விடுவது என்று பிறர் எனக்குச் சொல்லுவதை நான் வெறுக்கிறேன்" இரண்டாவது ஹிட்லரின் தலைமையிலிருந்த நாஜிகளின் வெறித்தனம். ஆனால் அப்படத்தின் இறுதியில் அவர் நிகழ்த்தும் உரை கம்யூனிஸ ஆதரவானது என விமர்சகர்கள் குற்றம் சாட்டினர். ஆனால் மக்கள் அவ்வுரையை மிகவும் விரும்பினர்.

பேர்ள் ஹார்பர் (Pearl Harbour) தாக்கப்பட்டபோது, சான் பிரான்ஸிஸ்கோவில் இயங்கிவந்த ரஷ்யப் போர் நிவாரணத்திற்கான அமெரிக்கக் கமிட்டியின் (American Committee for Russian War Relief) சார்பில் அவர் பேசுமாறு அழைக்கப்பட்டார். அன்று அந்த அரங்கத்தில் 10,000 பேர் குழுமியிருந்தனர். சாப்ளின் "தோழர்களே" (Comrades) என்று தன் உரையைத் தொடங்கினார். உடனே பெரும் ஆரவாரம் எழுந்தது. அது அடங்கியவுடன் தன் உரையைத் தொடர்ந்தார். "நான் தோழர்களே என்றபோது உண்மையாகத்தான் சொன்னேன். இன்றிரவு இங்கு பல ரஷ்யர்கள் இருப்பீர்கள் என எண்ணுகிறேன். உங்களுடைய நாட்டுமக்கள் போர்க்களத்தில் சண்டையிட்டு மாய்ந்து கொண்டிருக்கும் இந்நேரத்தில் உங்களைத் தோழர்களே என்றழைப்பதில் பெருமையடைகிறேன்."

"நான் ஒரு கம்யூனிஸ்ட் அல்ல. நான் ஒரு மனிதன். கம்யூனிஸ்ட்டுகள் வேறு எவரிடமிருந்தும் வேறுபட்டவர்களல்லர். ஒரு கம்யூனிஸ்டு தாய் மற்றெந்தத் தாயையும் போலத்தான். தன்மகன் திரும்பி வரமாட்டான் என்ற செய்தியைக் கேட்கும்போது மற்றெந்தத் தாயைப் போலவே அவளும் அழுவாள். இந்த நேரத்தில் பல ரஷ்யத் தாய்மார்கள் அழுதுகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய மகன்கள் பலர் மடிந்து கொண்டிருக்கின்றனர்..."

இவ்வாறு தான் ஒரு மனிதாபிமானி என்று பலமுறை சாப்ளின் கூறிவந்தபோதிலும், அவர் ஒரு கம்யூனிஸ்ட் என்றே அவருடைய எதிரிகள் குற்றம் சாட்டினர். சாப்ளினின் மனிதாபிமான உணர்வுகளை அவருடைய எல்லாப் படத்திலும் காணலாம். இதற்கு ஒரு சிறந்த உதாரணம் "மெஸ்யுர் வர்து" என்ற படமாகும். இப்படத்தின் கடைசிக் காட்சியில் தூக்குமேடைக்குச் செல்லும் முன் அவர் பேசும் வசனங்கள் அர்த்தம் பொதிந்தவை.

உதாரணமாக, "பெருமளவில் கொலைகள் புரிபவன் என்ற வகையில் நான் ஒரு கற்றுக்குட்டிதான்"; "நல்லதோ, தீயதோ — எதுவானாலும் அதிகமானால் நம்மையெல்லாம் அழித்துவிடும்."

"டீன் ஏஜ்" பெண்களிடம் சாப்ளினுக்கு இருந்த நாட்டத்தை பல ஒழுக்கவாதிகள் கடுமையாகச் சாடினர். 1918 ஆம் ஆண்டு அவர் மில்ட்ரெட் ஹாரிஸ் (Mildred Harris) என்ற 16 வயதுப் பெண்ணை மணந்து கொண்டார். இரண்டாண்டுகளுக்குப் பிறகு அவர்கள் விவாகரத்து செய்து கொண்டனர். ஆறுவருடங்களுக்குப் பின் தன்னுடைய 35வது வயதில் லோலிதா மாக்முர்ரே (Lalita MacMurray) என்ற பெண்ணை மணந்தார். அவளுக்கும் வயது 16. மூன்று வருடம் குடும்பம் நடத்திய இவர்களுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். 1933 ஆம் ஆண்டு தன்னுடைய 44வது வயதில் பாலெ கோடார்ட் (Paulette Goddard) என்ற 19வயது நடிகையை மணந்தார் சாப்ளின்! இவர் மாடர்ன் டைம்ஸ், தி கிரேட் டிக்டேடர் ஆகிய படங்களில் கதாநாயகியாக நடித்தவர். இவர்கள் 1942 இல் விவாகரத்து செய்துகொண்டனர். யூஜின் ஒநில் (Eugene O'Neill) என்ற புகழ்பெற்ற நாடகாசிரியரின் மகளான ஊனா ஒநில் (Oona O'Neill) என்பவரை சாப்ளின் திருமணம் செய்தார். அப்போது சாப்ளினுக்கு வயது 54. அப்பெண்ணின் வயது 18. ஆனால் இவர்கள் நீண்ட காலம் ஒன்றாக வாழ்ந்து எட்டு குழந்தைகளைப் பெற்றனர்.

1952-இல் சாப்ளின் அமெரிக்காவிலிருந்து வெளியேறி ஸ்விட்ஸர்லாந்து நாட்டிலுள்ள வெவி (Vevey) என்ற இடத்தில் குடியேறினார். அதற்குப்பின் 1957இல் **எ கிங் இன் நியூ யார்க்** (A King in New York) என்ற படத்தையும் 1966இல் **தி கௌன்டெஸ் ஃப்ரம் ஹாங்காங்** (The Countess from Hong Kong) என்ற படத்தையும் இயக்கினார். இரண்டாவதாகக் கூறப்பட்ட படத்தில் மார்லன் பிராண்டோவும், சோஃபியா லோரனும் நடித்திருந்தனர். ஆனால் இரண்டு படங்களுமே வெற்றிபெறவில்லை.

1972 இல் "இருபதாம் நூற்றாண்டின் கலையெனப்படும் திரைப்படக்கலையின் வளர்ச்சிக்கு மதிப்பிடற்கரிய வகையில் உதவிபுரிந்ததற்காக" இரண்டாவது சிறப்பு அகாடமி விருதினைப் பெற்றார் சாப்ளின். 1975 ஆம் ஆண்டு அவருக்கு நைட் (Knight) என்ற உயரிய கௌரவம் பிரிட்டிஷ் ராணியினால் வழங்கப்பட்டது.

1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் கிறிஸ்துமஸ் இரவில் சாப்ளின் மரணமடைந்தார். திரும்பிப் பார்க்கும்போது சினிமா உலகத்தின் விற்பன்னர்கள் பலரின் பெயரை நாம் காண்கிறோம். அவர்களில் ஒரு மேதை இருந்தாரென்றால் அது சார்லி சாப்ளினாக மட்டுமே இருக்க முடியும்.

**திரைப்படப்பணி வரலாறு:**

ஷோல்டர் ஆர்ம்ஸ்(1918), தி கிட்(1920), கோல்ட் ரஷ்(1925) ஸிடி லைட்ஸ்(1931), மாடர்ன் டைம்ஸ்(1936), தி கிரேட் டிக்டேடர்(1940), மெஸ்யுர் வர்து(1947), லைம்லைட்(1953), எ கிங் இன் நியூ யார்க்(1957), தி கௌன்டெஸ் ஃப்ரம் ஹாங்காங்(1966). ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தி கிரேட் டிக்டேடர் என்ற படத்தின் இறுதியில் சார்லி சாப்ளின் நிகழ்த்தும் உரை



"மன்னிக்கவும். நான் ஒரு பேரரசனக விரும்பவில்லை. அது என்னுடைய தொழிலும் அல்ல. நான் யாரையும் ஆளவோ, வெற்றி கொள்ளவோ விரும்பவில்லை. முடிந்தால் எல்லோருக்கும் உதவி செய்யவே நான் விரும்புகிறேன். யூதனோ யூதனல்லாதவனோ, கருப்பு மனிதனோ வெள்ளை மனிதனோ யாராக இருந்தாலும் உதவவே விரும்புகிறேன்.

நாம் எல்லோரும் ஒருவருக்கொருவர் உதவிசெய்யவே விரும்புகிறோம். மனிதர்கள் என்றால் அப்படித்தான்! நாம் ஒவ்வொருவரும் மற்றவரின் மகிழ்ச்சியில்தான் வாழ விரும்புகிறோம்; துயரங்களில் அல்ல! நாம் ஒருவரை ஒருவர் வெறுக்க நினைக்கவில்லை! இந்த உலகத்தில் எல்லோருக்கும் இடமிருக்கிறது. இந்த நல்ல பூமி செழுமையானது. அது எல்லோருக்கும் எல்லாம் தரவல்லது.

வாழ்க்கையின் பாதை சுதந்திரமானதாகவும், அழகானதாகவும் இருக்கமுடியும். ஆனால் நாம் வழிதவறி விட்டோம். பேராசை மனிதனின் ஆன்மாவை விஷமாக்கிவிட்டது; உலகத்தை வெறுப்பு என்ற தடைகளினால் பிரித்து விட்டது; நம்மையெல்லாம் துயரத்திற்குள்ளும் ரத்தச் சகதிக்குள்ளும் தள்ளிவிட்டது. வேகத்தை உருவாக்கிய நாம் உள்ளுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறோம். வாரிவழங்க வேண்டிய இயந்திரங்கள் நம்மை வறுமையில் விட்டுச் சென்று விட்டன. அறிவு நம்மை மற்றவர் மீது நம்பிக்கையற்ற சுயநலவாதிகளாக்கிவிட்டது; நம்முடைய புத்திசாலித்தனம் நம்மை இறுக்கமானவர்களாக, இரக்கமற்றவர்களாக ஆக்கிவிட்டது. நாம் மிக அதிகமாக சிந்திக்கிறோம்; மிகக் குறைவாக உணர்கிறோம். இயந்திரங்களை விட நமக்கு அதிகம் தேவைப்படுவது மனிதாபிமானமே. புத்திசாலித்தனத்தை விட நமக்கு இரக்கமும், மென்மையுமே அதிகம் தேவைப்படுகிறது. இக்குணங்கள் இல்லாத வாழ்க்கை வன்முறை நிறைந்ததாகி விடும். நாம் வாழ்க்கையையே தொலைத்து விடுவோம்.

"விமானமும், வானொலியும் நம்மை நெருங்கிவரச் செய்துவிட்டன. இப்பொருட்களின் தன்மையே மனிதனுக்குள்ளிருக்கும் நல்லதைக் கூவியழைக்கிறது; உலகளாவிய சகோதரத்துவத்தை சுட்டிக்காட்டுகிறது; நாம் எல்லோரும் ஒற்றுமையாயிருக்க வேண்டும் என்று கூறுகிறது. இப்போது கூட என் குரல் உலகம் முழுவதிலு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முள்ள பல இலட்சக்கணக்கான மக்களை சென்றடைகிறது; நொந்து போயிருக்கும் லட்சக்கணக்கான ஆண்கள், பெண்கள், சிறு குழந்தைகளைச் சென்றடைகிறது. அப்பாவிமக்களைச் சித்திர வதை செய்து சிறைப்படுத்தும் ஒரு அமைப்பிற்கு பலியானவர்கள் இவர்கள்! நான் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்போருக்கெல்லாம் நான் கூறுவேன்: "கவலைப் படாதீர்கள்." நாம் அனுபவிக்கும் துயரமெல்லாம் பேராசையினால் விளைந்தது; மனிதசமூகத்தின் முன்னேற்றத்தைக் கண்டு அஞ்சி நிற்கும் மனிதர்களின் கசப்புணர்வினால் விளைந்தது. மனிதர்களின் வெறுப்பு நீங்கிவிடும், சர்வாதிகாரர்கள் மரணமடைவார்கள். அப்போது மக்களிடமிருந்து அவர்கள் பறித்த அதிகாரம் மக்களிடமே திரும்ப வந்து சேரும். மனிதர்கள் மரிக்கும் வரையில், சுதந்திரத்துக்கு சாவு கிடையாது.

"போர் வீரர்களே! இந்த விலங்குகளிடம் உங்களைக் கொடுத்து விடாதீர்கள். அவர்கள் உங்களை வெறுக்கிறார்கள். அடிமைப்படுத்துகிறார்கள்; உங்கள் வாழ்க்கையை கடுமையாய்க் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார்கள், நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை அவர்கள் சொல்வார்கள்; நீங்கள் என்ன நினைக்க வேண்டுமென்றும் எதை உணரவேண்டுமென்றும் கூறுவார்கள். உங்களை பயிற்றுவிப்பார்கள்; உணவு கொடுப்பார்கள்; கால்நடைகளைப் போல் உங்களை நடத்தி இறுதியில் வெடிமருந்தாகப் பயன்படுத்துவார்கள். நீங்கள் உங்களை இந்த செயற்கை மனிதர்களிடம் தந்துவிடாதீர்கள்– இவர்கள் இயந்திர மூளையையும், இயந்திர இதயத்தையும் கொண்ட இயந்திர மனிதர்கள்! நீங்கள் இயந்திரங்கள் அல்ல! நீங்கள் மனிதர்கள்! மனித சமுதாயத்தை நேசிக்கும் மனிதர்கள்! மனித சமுதாயத்தை நேசிக்கும் மனிதர்கள் ! யாரையும் வெறுக்காதீர்கள்! நேசிக்கப்படாதவர்களும், செயற்கையானவர்களும் மட்டுமே வெறுக்கிறார்கள்!

"போர்வீரர்களே! அடிமையாவதற்காகப் போரிடாதீர்கள்! சுதந்தரத்திற்காகப் போரிடுங்கள்! தேவனின் அரசாங்கம் மனிதனுக்குள் இருப்பதாக செயின்ட் லூக்கின் (பைபிள்) 17வது அத்தியாத்தில் எழுதப்பட்டுள்ளது. தேவனின் அரசாங்கம் ஒரு மனிதனுக்குள் இல்லை. ஒரு மனிதக் கூட்டத்தினுள் இல்லை! எல்லா மனிதர்களினுள்ளும் இருக்கிறது! உங்களுக்குள் இருக்கிறது! அது இயந்திரங்களை உருவாக்கும் அதிகாரம்! மகிழ்ச்சியை உருவாக்குவதற்கான அதிகாரம்! இந்த வாழ்க்கையை சுதந்திரமானதாகவும், அழகானதாகவும் ஆக்கும் அதிகாரம்! இந்த வாழ்க்கையை ஒரு அற்புத சாகசமாக்கும் அதிகாரம்! அப்படியென்றால், ஜனநாயகம் என்ற பெயரில் நாம் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவோம். நாம் எல்லோரும் ஒன்றுபடுவோம். ஒரு புதிய உலகத்திற்காக நாம் போராடுவோம். மனிதர்களுக்கு வேலை வாய்ப்பையும், இளைஞர்களுக்கு எதிர்காலத்தையும், முதியவருக்கு பாதுகாப்பையும் அளிக்கும் அந்த உலகத்திற்காகப் போராடுவோம்.

"இவற்றையெல்லாம் தருவதாகக் கூறித்தான் இந்த மிருகங்கள் அதிகாரத்திற்கு வந்தனர். ஆனால் அவர்கள் பொய் சொல்கிறார்கள்! அவர்கள் அந்த வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை! காப்பாற்றப் போவதுமில்லை! சர்வாதிகாரர்கள் தங்களை விடுவித்துக் கொள்கிறார்கள்; மக்களை அடிமைப்படுத்துகிறார்கள். நாம் இப்போது உலகத்தை விடுவிக்கப் போராடுவோம்; தேச எல்லைகள் என்ற தடைகளை நீக்குவதற்காக, வெறுப்பு, சகிப்பின்மை இவற்றோடு பேராசையையும் ஒழிப்பதற்குப் போராடுவோம்! விஞ்ஞானமும், முன்னேற்றமும் நம் எல்லோருடைய மகிழ்ச்சிக்கும் இட்டுச் செல்லும் வகையிலான ஒரு உலகத்திற்காகப் போராடுவோம். போர்வீரர்களே, ஜனநாயகம் என்ற பெயரில் நாம் ஒன்றுபடுவோம்!

"ஹான்னா! நான் பேசுவது உனக்குக் கேட்கிறதா? நீ எங்கிருந்தாலும் மேலே பார்! மேலே பார் ஹான்னா! அதோ, மேகங்கள் கலைகின்றன! சூரியன் உள்ளிருந்து பிரகாசிக்கிறா ன்! நாம் இருளை விட்டு வெளிச்சத்திற்கு வருகிறோம்! நாம் ஒரு புதிய உலகத்திற்குள் பிரவேசிக்கிறோம்! இது இரக்கம் நிறைந்த ஓர் உலகம்! இங்கு மனிதர்கள் பேராசையும், வெறுப்புணர்வையும், மிருகத்தன்மையையும் விட்டொழித்து விடுவார்கள். மேலே பார் ஹான்னா! மனிதனின் ஆன்மாவிற்கு இறக்கை முளைத்து விட்டது. அவன் பறக்கத் தொடங்குவதைப் பார்! அவன் அந்த வானவில்லுக்குள் பறந்து செல்கிறான். நம்பிக்கை ஒளியை நோக்கிப் பறக்கிறான்! மேலே பார் ஹான்னா! மேலே பார்! ■

---

சார்லி சாப்ளினின் படங்களைப் பெற விரும்புவோர் கீழ்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் :

**நேஷனல் ஃபிலிம் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்,**
பவானி மேன்ஷன், 3, 4வது தெரு,
நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை – 600 034

---

(சலனம். ஒக–செப்'91)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எட்டடிக் குச்சுக்குள்ளே....

மலையகத்தின்
நடுநாயக மென்றே
சிலரால் வருணிக்கப்படும்
கண்ணுச்சாமி என்ற
கடைசி மன்னன்
அன்று ஆண்ட
கண்டி ராச்சியத்தின்
அன்றைய தலை நகரமாம்
இன்றைய கண்டி மா நகரத்தை
எழில் கொஞ்ச வைப்பவர்களே
எங்கள் சகோதர சகோதரிகள் தான்
நகர சுத்தித் தொழிலாளர்கள்....
நரக சுத்தித் தொழிலாளர்கள்....

இவர்கள்
ஒரே ஒரு நாள்
இயங்க மறுத்தாற் போதும்....
மதிப்பிற் குரிய இந்த
மா நகரம்
மா நரகமாகும்!

இத்தனைச் சிறப்பு மிக்க
இந்த மா நகரத்துக்குள்ளே
அமைந்து அணிசெய்வதே தான்
கூடி வாழ்ந்து இவர்கள்
கொஞ்சிக் குலாவி
குடும்பம் நடாத்தும்
சேரிப் புலம்!

மேலும் இதற்கு
மெருகூட்ட அமைந்ததே தான்
சொர்க்க நகரத்துக்குத்
திசை திருப்பி யனுப்பும்
பொது மயானம்

இரவிலே
மொத்தமாக எப்படியோ?
பகலிலே சில்லறையாகப்
புதைத்து எரிக்கும்
செத்த பிணங்களைக் கூட

சேர்ந்திருக்க விடாமல்
ஆதியிலே இருந்தவைகள் அல்ல
பாதியிலே வந்த
இந்த மதங்கள்
பிரித்தே வைத்திருக்கின்றன
சிறப்பே யன்றோ?

இலங்கை நாணயத்துக்குப் போலவே
இந்தச் சேரியின் மதிப்பும்
இன்னும் குறைந்து போய் விடவில்லை – சதா
தாறிக் கொண்டே இருக்கிறது'

ஓட்டுக் கேக்க வாரப்போ மட்டும்
நம்ம தலவரு மாருக
'எட்டடிக் குச்சுக்குள்ளே
பத்து உசுருக
எப்புடி வாழுமு' ன்னூ
மூக்காலே அழுவாக
அத்தோடே அதுசரி—அப்பறம்
அடுத்த தேர்தலுக்குத் தான்
புதுசா ஒன்னுமில்லே
அதே பல்லவி!
இப்பவே லேசாச்
சூடு புடிக்குது?

அசோக்கா ஒஸ்டல் சந்திக்கு
அந்தப் பக்கத்துலேயும் நாங்க
நல்லாவே இருக்கப்புடாது
நாசமாப் போகணு முன்னுதான்-எங்க
செறப்பு மிக்க
சேரியின் பேராலேயே
சரசுவதி புண்ணியத்துலே

கவலையைப் போக்குற
மருந்து குடிக்க ஒரு
செறப்பான சொக்க வாசலையும்
தொறந்தே வச்சிருக்காக...
அத்தி ஆறுமணி யானா-எங்களே
யாரும் புடிக்க மாட்டூக!
ஒரே தீர்த்தம்?

சாராயக் கலை இலக்கியத்
தொடர்பு இங்கே
யாரெத்தானுங்க விட்டுவச்சிச்சீ
எங்க ஆயி அப்பனெப்
பாத்தே நாங்க
தானாக் கத்துக்கிட்டோம்
யாரையும் நாங்க
குத்தஞ் சொல்ல மாட்டோம்!

சாராயம் கள்ளைப் பழித்தவனைத்
தாய்தடுத்தாலும் விடேன்'
சினிமாப்படம் 'மனோகரா' வுலே
சிவாசி கணேசன் மாதிரி
நாங்களும் நல்ல நல்ல
வசனம் பேசுவம்!

பாலெக் குடிச்சிப் புட்டுத்தான்-ஒங்க
பாலகன் திருஞான சம்பந்தரு–தேவாரப்
பாட்டுப் பாடுனாராம்!
தாங் கெல்லாம்
தெருஞான சம்பந்தருங்க....
கள்ளுத் தண்ணியெ
ஓவராப் போட்டுப்புட்டு
நல்லாவே பாடுவோம்!

www.tamilarangam.net

ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு-பல
கோலமயில் என் துணை இரும்பூ ன்னு
ஆரம்பிச்ச முன்னா.... ஓங்க
கவியரசு கண்ணதாசனுக்கும்
இன்னமும் ஒரு போத்த
தண்ணி! கேக்குமுங்க!

எட்டடிக்குச்சுக்குள்ளே
பத்துப்பனிரெண்டு உருப்புடிகளா?
எப்புடீங்குறேன் இதுக்குளே நீங்கெல்லாம்
புள்ளெ குட்டியெயும் வேறே
பெத்துத் தொலைக்கிறீக?

தோட்டக் காட்டுச் சனங்களையும்-நாங்க
தொட்டுக் காட்டாட் டீ-பாவம்
கோவிச்சிக் கிறுவாங்க!

எட்டடிக் குச்சுக்குள்ளே
பத்துப்பன்னிரண்டு
உறுப்படிகளா?
எப்புடீங்குறேன் இதுக்குள்ளே
நீங் கெல்லாம்
புள்ளெ குட்டியையும் வேறெ
பெத்துத் தொலைக்கிறீக?

தோட்டக் காட்டுச்
சனங்களையும் நாங்க
தொட்டுக் காட்டாட்டீ
பாவம்! அப்பறம் அவுக
கோவிச்சுக் கிறுவாகங்க!

கோச்சிப் பொட்டி லயத்துக்
காம்புறாவுக்கு உள்ளாரேயும்
பூந்துபாருங்க தெரியும்
அந்தச்
சேரிப்புலத்தின்
மறு பதிப்பு!
மக்கள் கலை இலக்கியத்
தொகுப்பு!

ஒட்டுக்கேக்க வாரப்போ
மட்டும்-இந்த
ஒட்டெலயத்துக்
காம்புறாவே எல்லாம்
ஒங்களுக்கே
சொந்தமாக்கித் தர
மொயச்சி பண்ணிக்கிட்டே தான்
சத்தியமா இருக்குறமுன்னு
தாண்டுதாண்டுன்னு
தாண்டுவாக-நம்ம
தலவரு மாருக!

அத்தோடெ அது சரி! அப்பறம்
அடுத்த தேருதலு வாரப்போ தான்
அதுவுஞ் சூடு புடிக்கும்!

எட்டடிக் குச்சுக்குள்ளே-சுப்பையா
எத்தனெ நாளிருப்பேன்னு-ஒங்க
கதிர்காமக் கந்தென் கிட்டே
காலடி தூக்கிக்கிட்டுப் போயி
அப்பவே கேட்டவுக நாங்க!
இப்ப அதையே

எங்க கிட்டையே கேட்டு
ஏகத்தாளமா பண்ணுறீக?
ராவணன் சீதை
கதை யெல்லாம்-ஒங்க
பாரதிக்குத் தெரியாதோ!
சிங்களத் தீவுன்னே
அவென் எழுதி வச்ச
எங்க சிறிலங்காவுலே....
மக்கள் கலை இலக்கியத்துக்கு—நாங்க
வாரிசுக இல்லீங்க...
ஆதி மூலமுங்க!

எழுதப் படிக்கத்
தெரியாதவுக தான் நாங்க...
அதுக் கென்னாங்க
நாங்க-ஒங்களெ விட
நெறையப் படிச்சிருக்கோம்! நாங்க
சண்டெகிண்டே புடிக்கிற நேரம்
வந்து பாத்திங்கன்னா - நீங்க
நின்னுகேக்க மாட்டீக...
மன்னிச்சிக் கங்க
பொம்மா போத்தான்னு தாங்க
நாங்க ஆரம்பிப்பம் - இங்கே
யாரும் கோவிச்சிக் கிறாதீக!

கடவுள் பக்தியிலே - எங்க
கள்ளு, வட்டிக்
கடை முதலாளிகள்
கிட்டேயும் நீங்க
நிக்க மாட்டீக....

சரசுவதி படத்துக்கு முன்னாடி
சாம்புராணி சூடப் பொகையே
மூணு மூணுவாட்டிப் புடிக்காமே
கடையே தொறக்க மாட்டாக!
கா சுப் பொட்டி
மேசைக்கு அடியிலேயும்
சுத்து முத்தும் பார்த்துக்கிட்டே
அப்புடியே - லேசா ஒரு புடி?

கள்ளுச் சாராயக் கடையையும்
சும்மா விட்டுற
நாங்கெல்லாம் ஒங்க மாதிரி
சோம்பேறிகன்னா நெனெச்சீக!

www.tamilarangam.net

கச்சிச் சண்டையே
அங்கேயும் ஆரம்பிச்சி
ஆசுபத்திரி போலிசுக்குப்
போகிற வரைக்கும்
பிச்சி வாங்கிறுவம்!

நடந்து முடிஞ்சத்துக்கு
பின்னாடியே தாங்க - அது
நன்னாவே இல்லேன்னு
யோசிப்பம்! ஆனா
உடாமெ அப்பறமும்
அதே தான்?

தேசபக்தி மானுக
வன் செயலே
போலிமா நடத்துன தெல்லாம்
ஒங்களுக்குத் தெரியுந்தானுங்களே!

கள்ளுத் தண்ணியோட
மகிமையினாலே தான் - நாங்க அப்ப
நின்னு புடிச்சோமுன்னூ
நெனைச்சுக்கிட்டு இருந்தோம்!
பொறகு தானுங்களே
வெசயமே தெரிஞ்சிச்சி!

கையிலே காதுலே மடியிலே
ஒண்ணுமே இல்லாத
கவ்வோதிப் பயலுக நாங்கன்னூ
முழுனமே தெரிஞ்சுக்கிட்டத்து நாலே தான்
அந்தத் தேசபக்தி மானுக
எங்கக் கிட்டே அவுக
கைவரிசையெக் காட்டலேன்னு
கள்ளுக் கடையிலே வச்சே தானுங்களே—தாங்க
கண்டு புடிச்சோம்!
ஓவராத் தண்ணிபோட்ட—ஒரு
ஓட்டெ வாய் பயே
உம்மையெக் கக்கிப்புட்டான்!

ஒங்க – போலீசு நாயெ
அனுப்புனாலும் – நீங்க இதே
தேடிக் கண்டுபுடிக்க மாட்டீக!

தாடியையும் மீசையையும் – வில்பத்துக்
காடா வளத்துக்கிட்டு
மாக்கிசம் சோசலிசம்
'கம் யூ நெசமுன்னு'
மேடைகளிலே பேசிக்கிட்டுத்
திரியிறவுகளுக்குந் தாங்க
சொல்லுறம்....
ஓங்க காலுமாக்சு
ஏங்கலுசு சொன்ன
அங்க அடையாளம் எல்லாம் – இங்கே
எங்கக்கிட்டெ தாங்க இருக்கு

எழக்குறத்துக்குன்னு
எங்கக்கிட்டே
எதுவுமே இல்லீங்க....
ஒழைப்பெத் தவர!

ஒண்ணே ஒண்ணு தாங்க
எங்கவுட்டு மண்டையெப் போட்டு
இன்னமும் ஒடைக்குது!

மண்ணோடேயே நாங்க
நூத்தி எம்பது வருஷமாப்
பின்னிக் கெடக்குறத்துனாலே-நாங்க
பண்ணை அடிமைகளே தானுங்க!

மண்ணின் மைந்தர்கள் ன்னும்
எங்களெப் பாத்துச்
செலபேரு சொல்லுறாக ..
எகத்தாளத்துக்குத் தானோ என்னவோ
யாருங்க கண்டது?

பாவாடை கழுகபோட்ட தலவருமாருக
பேச்சைக் கேட்டுக் கேட்டே
மோசமாப் போயிட்டோ முன்னு
இப்பத் தாங்க கொஞ்சம்
மீசை துடிச்சீ
ரோசமே வருகுது!
கள்ளுத் தண்ணியெப் போட்டமுன்னா
எல்லாம் மறந்து பூடுது!

ஒங்களுக் கெல்லாம் ஒரு
சங்கதி சொல்லுறேன் கேட்டுக்கங்க
கண்டியெ விட, ஒசத்தி
கொழும்பே தானுங்க! இங்கே
சேரீனு சொல்லுறத்தே—அங்கே
அவுக - தோட்டமுன்னே
பேரெ மாத்தி வச்சி
நாகரீக மாகீட்டாக?

குதுரெ ஓடுனத்துக்கு அப்பறம்
லாயத்தெப் பூட்டுறது...
ஆளெ உட்டுப்புட்டு அப்பறம்
வாலெப் புடிக்கிறது....
இதே நமக்குப்
வேலையாப் போச்சிங்க! போங்க!

ஊரை ஏக்கிறவீங்க வுட்டுப்
பேச்சைக் கேட்டு
ஓட்டுப் போட்டுப்புட்டு
ஒதெபட்டது தாங்க மிச்சம்! ஆனா
ஒதவி இல்லீங்க!

மாதிரிவீடும் கிராமமும்
எங்களெ மட்டும் ஏங்க?
ஓரங்கட்டிக்கிட்டே போகுது!
இதெ—யாருங் கேக்க மாட்டீகளா?

எட்டடிக் குச்சுக்குள்ளே
பத்து உறுப்படிகள்
என்றென்றுமே வாழவேண்டுமா?
இதற்கு ஒரு
முடிவு வேண்டும் - நாளை ஒரு
விடிவும் வேண்டும்!

கண்டி. எம். ராமச்சந்திரன்

(தாக்கம், டிச-யூன் 90-91)

www.tamilarangam.net

# புலிகள்:

# முதலாளியத் தேசியவாதிகளோ அன்றி ஏகாதிபத்தியம், தரகுமுதலாளியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளோ அல்ல !

விடுதலைப்புலிகள் தேசிய சக்திகளா? இல்லையா? என்பது பற்றி இப்போது புரட்சிகரமான சக்திகள் மத்தியில் ஒரு காரசாரமான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஏன் இந்த விவாதம் நடைபெறுகின்றது? இந்த விவாதத்தின் மூலம் நாம் அடைய இருக்கும் பயன் என்ன? என்று விளங்கவில்லை. எளிமையாகப் புரிந்துகொள்ளக்கூடிய உண்மைகளைக் கடினமான சொற்பதங்களைப் பாவிப்பதன் மூலம் தாமும் குழம்பி, மற்றவர்களையும் குழப்பி எந்த ஒரு முடிவுக்கும் வராமல் தொடர்ச்சியாக விவாதங்கள் நடைபெறுகின்றன. இந்த விவாதத்தில் மும்முரமாக ஈடுபட்டிருப்பவர்கள் சமர், தூண்டிலில் எழுதும் பிரஜைகள், NLFT, PLFT ஆகியவற்றின் ஆதரவாளர்கள், சமரன் பத்திரிகையை வெளியிடும் நக்ஸலைட்குழு, இன்னும் சில உதிரிகள் எனலாம்.

இக் கட்டுரையானது சமர் இல் வந்த கட்டுரையையும், அதற்குப் பதிலாக 48ஆவது தூண்டிலில் வந்த பிரஜைகளின் கட்டுரையையும் கவனத்தில் எடுத்து எழுதப்படுகின்றது. இதன் முற்பகுதி தூண்டில் தனது 48ஆவது பத்திரிகையில் கூறிய கருத்துகள் பற்றியும், இறுதிப் பகுதி புலிகள் பற்றி தெளிவாகத் தெரியும் உண்மைகளையும் (முன் வைக்கும்.

எந்த ஒரு பிரச்சினையைப் பற்றியும் முடிவு எடுக்க முனையும் நாம் முதலாவதாக குறிப்பிட்ட பிரச்சினையை இயங்கியல் அடிப்படையில் ஆராய வேண்டும். மாறாக ஏற்கெனவே இருக்கும் முடிவுகளுக்கு அல்லது விதிகளுக்குப் பொருந்திவருவதாகக் குறிப்பிட்ட பிரச்சினையைக் காட்டமுனையக் கூடாது

தற்போதைய காலகட்டங்களில் மார்க்ஸ் தொடக்கம் மாஓ வரையிலான மார்க்ஸிய அறிஞர்களது மேற்கோள்களை உதாரணம் காட்டி கட்டுரைகள் வெளிவருவது மிகவும் குறைவு. ஆனால் அவர்கள் சொன்ன கருத்துகளை அல்லது முடிவுகளை மனதில் வைத்து ஒவ்வொரு பிரச்சினையையும் அவர்களது முடிவுகளுக்கு ஏற்றவாறு எப்படியாவது காட்டிவிட்டால் சரி, அதுவே சரியான அணுகுமுறை என்ற போக்கே இன்று கட்டுரையாளர்கள் கடைப்பிடிக்கும் போக்காகும். இந்த விவாதத்தில் ஈடுபட்டிருக்கும் நபர்கள் பிரச்சினைகளிலிருந்து தொடங்கவில்லை. ஏற்கெனவே 'ஒளிவட்டம் உடைய நபர்கள்' சொன்ன முடிவுகளிலிருந்து தொடங்குகிறார்கள். ஒவ்வொரு பிரச்சினையையும் பகுத்தாயும் அணுகுமுறை இதுவல்ல.

புலிகள் தேசிய சக்திகளா? இல்லையா? என்ற விவாதத்தில் ஈடுபட்டிருக்கும் நபர்கள் இந்த விவாதத்தை நடாத்திக்கொண்டே இன்னும் ஒரு விவாதத்திற்கு தயாராகின்றார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்த விவாதமானது புலிகளுடன் ஐக்கிய முன்னணியா? இல்லையா? என்பதேயாகும். சில சந்தர்ப்பங்களில் இரண்டு விவாதங்களும் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ, ஒன்றாகவும் நடைபெறுகின்றது. `தேசிய சக்திகள்`, `ஐக்கிய முன்னணித் தந்திரம்' பற்றிய மாஓவின் கருத்துகளை மனதில் வைத்துக் கொண்டு அவை பற்றி ஏற்கெனவே ஒரு முடிவை எடுத்துவிட்டு புலிகளைப் பற்றி யாராவது மதிப்பிட முனைந்தால் அது தவறு. அது சலிப்பூட்டும் வீ வாதங்களை மட்டுமே உருவாக்கும்.

நாம் புலிகளைப் பற்றி மதிப்பிட வேண்டியது அவசியமானதே. எமது தேசத்தின் நிலைமையிலிருந்தும், புலிகளின் கடந்தகால, நிகழ்கால நடவடிக்கைகளிலிருந்தும் ஆராய்ந்து சரியான ஒரு முடிவை நாம் முன்வைக்க வேண்டும். அந்த முடிவை நாம் முன்வைக்கும் போது நாம் விஞ்ஞானரீதியான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது இயல்பானதே. அவ்வாறு அடையப்பெறும் முடிவானது மார்க்ஸிய மூலவர்கள் சொன்ன முடிவுகளுடன் அல்லது கருத்துகளுடன் பொருந்தி வருகிறதா? இல்லையா? என்பதல்ல பிரச்சினை. அடையப்பெறும் முடிவு பிரச்சினையைத் தீர்க்க உதவுகிறதா? இல்லையா? என்பதே பிரச்சினை. எமது முடிவு பிரச்சினையைத் தீர்க்க உதவி, மார்க்ஸிய மூலவர்களது முடிவிலிருந்து மாறுபட்டாலோ அன்றி மார்க்ஸிய மூலவர்களது பொதுவான முடிவுகள், கோட்பாடுகள் எமது பிரச்சினையைத் தீர்க்க உதவாவிட்டாலோ அவர்களது முடிவுகள், கோட்பாடுகளில்தான் பிழையிருக்கின்றது. அத்துடன் அவர்களது முடிவைத் திணித்த அல்லது திணிக்க முனையும் எங்களிலும் பிழையிருக்கிறது.

புலிகள் தரகு முதலாளித்துவச் சக்திகளின் நலன்களுக்காகப் போராடுவதால் அவர்கள் தேசிய சக்திகள் இல்லை என்பது `சமர்` பத்திரிகையினதும், ஒரு சாராரினதும் வாதமாகும். இது பிரச்சினைகள் சகலவற்றையும் `வர்க்கக் கட்டமைப்பு', `வர்க்கப் பார்வை' என்று சொல்லப்படுபவற்றுக்குள் உள்ளடக்கிவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று எண்ணுகின்ற தவறான போக்கின் விளைவாகும். ஒரு குறிப்பிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து புலிகள் போராடுகின்றார்கள். அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் பார்த்தால் புலிகள் முதலாளித்துவ தேசியவாதிகள் என்ற வாதத்தை பிரஜைகள் போன்றோர் முன்வைக்கின்றார்கள். இதுபற்றி நாம் கவனிப்போம்.

"புலிகள் போராடும் கோரிக்கைகளின் தேசியத்தன்மை காரணமாக முழுத் தேசிய வர்க்கங்களுமே புலிகளுக்குப் பின்னால் நிற்கின்றன" (கலம் 48;பக்கம்:22) என்ற கருத்தை பிரஜைகள் கூறுகின்றார்கள். `பின்னால் நிற்கின்ற' என்ற சொல் ஒரு போராட்டத்தின் முன்னணிப்படையையும், அதன் பின்னால் அணிவகுத்துள்ள மக்களையும் அர்த்தப்படுத்துகின்றது. அந்த அர்த்தத்தில் பார்த்தால் புலிகளுக்குப் பின்னால் மக்கள் நிற்கவில்லை. மாறாக இழுபடுகிறார்கள். அல்லது வேறுவழியில்லாமல் ஆதரிக்கின்றார்கள் என்ற சொல்லையே நாம் பிரயோகிக்கலாம். அதற்கு

**யாருக்கு சொல்லி அழ..........**

வளைகுடா யுத்தத்தில் அமெரிக்காவின் இராணுவச் செலவீனத்தின் பங்குதாரர்களான ஜேர்மனி, யப்பான், தென்கொரியா, சவூதிஅரேபியா போன்ற நாடுகள் தமது பங்கின் முழுத்தொகையையும் இன்னும் செலுத்தவில்லை என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் வேதனைப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதற் பந்தியில் ஜப்பானுக்கு எதிரான சீன மக்களின் தேசிய யுத்தத்தில் சீனக் கொம்யூனிஸ்ட்டுக் கட்சி மக்கட்தொகையின் சகல பிரிவினதும் பிரதிநிதியாக இருந்தது உதாரணமாகக் காட்டப்படுகின்றது. அந்தத் தொனியையும் பார்த்தால் புலிகள் இப்போது சகல பிரிவினதும் பிரதிநிதிகள் என்பதுபோல் பிரஜைகள் குறிப்பிடுகின்றனரோ என்று எண்ணத் தோன்றுகிறது. அதற்குத் தெளிவாகவும், உறுதியாகவும் கூறமுடியும் புலிகள் எந்த மக்கள் பிரிவினதும் பிரதிநிதிகள் அல்ல. மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லப்படும் இடத்தில் குறைந்தபட்சம் முதலாளித்துவ ஜனநாயகமாவது இருக்கவேண்டும்.

"அனைத்து வர்க்கங்களினதும் நலன்கள் புலிகளின் தேசியக் கோரிக்கைகளுடன் பிணைந்துள்ளதால்..." என்று பிரஜைகள் அதே கட்டுரையில் குறிப்பிட்டுள்ளனர். இது பிழையான ஒரு கருத்தாகும். இந்தப் போராட்டத்தை நாம் சரியாக ஆராய்வோமாயின், அனைத்து வர்க்கங்களினதும் நலன்களில் சில, புலிகளின் நலன்களை அடையும் வழிமுறைகளுடன் பிணைந்துள்ளன எனக் குறிப்பிடுவதே சரி என நாம் உணர்வோம்.

மேலும், புலிகள் விடும் துண்டுப் பிரசுரங்கள், அவர்களது பத்திரிகைகள் வெளியிடும் கருத்துகள், அவர்களது அறிக்கைகள், அவர்கள் அரசியல் தலைவர்களுக்கு எழுதும் கடிதங்கள், பிரபாகரனின் சுதுமலைப் பேச்சு இவற்றில் இருந்துகொண்டு புலிகளை மதிப்பிடக் கூடாது. ஏனெனில் அங்கே பாலசிங்கம் போன்றவர்களோ அன்றி வெறும் அரசியல் கதைப்பவர்களோ மட்டும் இல்லை. சயனைட்டை கழுத்தில் கட்டிய இராணுவ ஊழியர்களை அந்த அமைப்பு கொண்டுள்ளது. அந்த அமைப்பை புரிந்துகொள்ள வேண்டுமாயின் ராஜீவ் காந்தி , அமிர்தலிங்கம் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டே அவர்களை அந்த அமைப்பு துடைத்தொழித்தது என்பதை நாம் கவனத்தில் எடுக்கவேண்டும். ஆக, அவர்களைப் பற்றிய செய்திகளில் இருந்து முடிவுக்கு வராமல் அவர்களது நடவடிக்கையிலிருந்தே நாம் முடிவுக்கு வரவேண்டும். செய்திகள் அவர்களது நடவடிக்கைகளை உணருவதற்கு, ஊர்ஜிதம் செய்வதற்கே உதவும். அவ்வளவுதான்! `சமர்` உம், `பிரஜைகள்`உம் அவர்களது செய்திகள், அறிக்கைகள் ஆகியவற்றை விவாதிப்பதன் மூலம் புலிகள் தேசிய சக்திகளா? இல்லையா? என்ற முடிவுக்கு வர முனைகிறார்கள். இது பிரயோசனமற்றது.

"புலிகளோ இந்தியத் தலையீடு தமது தனித்துவத்தை அங்கீகரித்தே சாத்தியப்படவேண்டும் என்றது. இதற்குமேல் ஒரு மூன்றாம் உலகநாட்டின் முதலாளியத் தேசியவாதத்தின் போர்க்குணம் வேறெப்படி இருக்கமுடியும்" (கலம்:48, பக்கம்:24) என்று பிரஜைகள் கேட்கிறார்கள். புலிகள் தமது தனித்துவத்தை அங்கீகரிக்கச் சொல்லுவது மூன்றாம் உலகநாட்டின் முதலாளித்துவத் தேசியத்தின் போர்க்குணம் அல்ல. அது புலிகள் என்ற அமைப்பின் போர்க்குணம். ஒரு அமைப்பின் போர்க்குணத்தையும், ஒரு தேசியத்தின் போர்க்குணத்தையும் போட்டுக் குழப்பிக்கொள்ளக் கூடாது

புலிகள் தமது எந்த இலக்குகளை அடைவது எனினும் இராணுவ வன்முறையையே நம்பியிருக்கும் ஓர் அமைப்பாகும். அந்த அமைப்பை ஓர் அரசியல் ரீதியான அமைப்பாகக் காட்ட முனைவது சரியா? அப்படியாயின் அதன் அரசியல் இலக்கு என்ன? அவர்களது நடைமுறையிலிருந்து அவர்கள் எந்த ஒரு அரசியல் இலக்கையும் நோக்கி நகர்வதாகக் காட்டமுடியாது. இங்கே அரசியல் இலக்கு என்று குறிப்பிடப்படுவது;

www.tamilarangam.net

குறிப்பிட்ட ஒரு சமூகப் பிரிவின் நலன்களுக்காக அந்தக் குறிப்பிட்ட சமூகப் பிரிவின் நலன்களை அடையும் திசையில் போராட்டத்தை, வழிமுறைகளை முன்னெடுத்துச் செல்வதே அரசியல் இலக்கு என்ற சொல் மூலம் குறிப்பிடப் படுகிறது. மத்தியதர வர்க்க அரசியல் அல்லது முதலாளித்துவ தேசியத்தன்மை ஆகியவற்றுக்கு உரிய ஊசலாடும் மனோபாவம் உள்ள அமைப்பே புலிகள் என்று காட்டி புலிகளை ஓர் அரசியல் அமைப்பாக நிறுவமுனைவதுடன் உடன்படமுடியாது. அதாவது மக்கள் தொகையின் ஒருபிரிவினது நலன்களை மையப் படுத்தி அவர்கள் தமது வேலைமுறையை முன்னெடுத்துச் செல்லாததால் அவர்கள் ஓர் அரசியல் அமைப்பு அல்ல.

மாறாக, அவர்களுக்கு ஓர் இலக்கு இருக்கிறது. அதில் அவர்கள் திட்டவட்டமான வரையறைகளையும், தெளிவுகளையும் கொண்டிருப்பதாகக் காணமுடியாவிட்டாலும், ஒரு குறிப்பிட்ட நலன்களை அடையும் திசையில் நகர்வதைக் காணமுடியும். அவர்களது சிறந்த இராணுவ நடவடிக்கைகள் மூலம் அந்தத் திசையில் கணிசமானளவு முன்னேறியிருக்கிறார்கள். அந்த 'இலக்கு' என்னவென்றால் அந்த அமைப்பின் சொந்த நலன்களை அடையும் இலக்கேயாகும். இன்றுவரை அவர்களது நடவடிக்கையிலிருந்து இரண்டு விடயங்கள் திட்டவட்டமாகத் தெரிகின்றன. ஒன்று, தமிழ் மக்களை அடக்கியாளும் உரிமை அவர்களுக்கு மட்டுமே உண்டு. அதை அவர்கள் யாருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். இரண்டாவது, அவர்களது இராணுவக் கட்டமைப்பு தொடர்ச்சியாகப் பேணப்படவேண்டும். உண்மையில் இவை இரண்டில் இரண்டாவது 'இலக்கே' அல்ல. அது இலக்கை அடைவதற்கான வழிமுறையின் ஸ்தாபனக் கட்டமைப்பே. இலக்கை அடைவதற்கான ஸ்தாபனக் கட்டமைப்பே இலக்காகி விட்ட ஒரு ஸ்தாபனம், அந்த ஸ்தாபனக் கட்டமைப்பை காப்பதே இலக்காகி விட்ட ஒரு ஸ்தாபனம் பல குழப்பமான நடவடிக்கையில் ஈடுபடுவதும் தவிர்க்க முடியாதது. அது முன்னுக்குப்பின் முரணான, தான் கூறியவற்றிற்கு முரணான நடவடிக்கையில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது. அவற்றை ஏதோ மத்தியதர வர்க்கத்தின் அல்லது முதலாளியத் தேசியத்தின் ஊசலாட்டமான பகுதியாகக் கொள்ளக் கூடாது. மேலே குறிப்பிட்ட இரண்டு விடயங்களிலும் புலிகள் உறுதியாக உள்ளார்கள். அவற்றை அடைவதற்கு அல்லது இருக்கும் நிலைமைகளை காப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளிலும் இறங்கப் புலிகள் தயங்கமாட்டார்கள். மிகவும் பலம்வாய்ந்த ஒரு இராணுவக்குழுவை அவர்கள் கொண்டிருப்பதால் இன்றுவரை அவர்களை இந்தியாவோ அன்றி இலங்கை இராணுவமோ தோற்கடிக்க முடியாதுள்ளது.

புலிகள் எந்த ஏகாதிபத்தியத்தினதோ அன்றி தரகு முதலாளிகளினதோ பிரதிநிதிகள் அல்ல. இதன் அர்த்தம் ஏகாதிபத்திய, தரகு முதலாளித்துவ எதிர்ப்புப் போராளிகள் புலிகள் என்பதும் அல்ல. புலிகள் ஏகாதிபத்தியத்திடம் இருந்து உதவிகள் பெறுவார்கள். அவர்களின் நலன்களுக்கு எதிராகப் போகாமல் கண்டும் காணாதிருப்பார்கள். அவர்களது போராட்டத்தின் இறுதி விளைவு ஏகாதிபத்தியத்திடம் நாட்டை அடகுவைப்பதாகக் கூட இருக்கமுடியும். ஆனால் அவர்கள் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகள் அல்ல. எந்த ஒரு ஏகாதிபத்தியமும் புலிகளுடன் முரண்பட்டால் அதாவது புலிகளின் நலன்களுக்கு எதிராக செயற்பட்டால் அந்த ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இராணுவ நடவடிக்கையில் இறங்க புலிகள் தயங்க மாட்டார்கள். அது அமெரிக்காவாக இருந்தாலும் புலிகளைப் பொறுத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமட்டில் சிறிய விடயம். இதனைப் புரிந்துகொள்வதற்கு சர்வதேச அளவில் சதாம், நொறியேகா போன்றவர்கள் அமெரிக்காவின் அடிவருடிகளாக இருந்தபோதும், தமது சொந்த நலன்களுடன் அமெரிக்கா முரண்பட்டபோது யுத்தம் புரியத் தயாரானதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும் கும்பல்களின் நலன்களுக்கு எதிராக யார் போனாலும் இந்த வகையான இராணுவக் கும்பல்கள் அல்லது குழுக்கள் இராணுவ ரீதியாக பிரச்சினையை முகங்கொடுக்கத் தயங்குவதில்லை. சதாம்குசைன், நொறியேகா ஆகியோருக்கு இருந்த வாய்ப்புகளை விட புலிகளுக்கு ஒரு நீண்டகால யுத்தத்திற்குச் சாதகமான அம்சங்கள் அதிகமாகவேயுள்ளன. ஏனெனில் அவர்கள் நகர்ப்புறக் கெரில்லா வடிவத்தில் பல படிப்பினைகளைப் பெற்ற, சயனைட்டைக் கழுத்தில் கட்டிய ஊழியர்கள்.

தமிழ் மக்களுக்கோ அன்றி எந்த ஒரு புரட்சிகர, ஜனனாயக சக்திகளுக்கோ புலிகள் ஜனனாயகத்தை வழங்காததால் புலிகள் மக்களினதும், புரட்சிகர, ஜனனாயக சக்திகளினதும் எதிரிகள். அவர்களது நலன்களை அடையும் வழிமுறைகள் தமிழ் மக்களது தேசிய நலன்களுடன் சம்பந்தப்பட்டிருந்தபோதும் அவர்கள் மக்களினதும், புரட்சிகர சக்திகளினதும் எதிரிகளே.

புலிகளுடன் இணைந்து தமிழ் மக்களின் தேசிய நலன்களை பெறமுனைவது என்பதோ அல்லது புலிகளுடன் ஐக்கிய முன்னணி அமைத்துப் போராட முனைவது என்பதோ எதுவாக இருப்பினும் அது சுய அழிவுப் பாதையே.

மேலே புலிகள் பற்றிச் சொன்ன கருத்துகளுக்கு ஆதாரமாக மார்க்ஸிய மூலவர்களது மேற்கோள்கள் தேவையில்லை. இவை தெளிவாகத் தெரியும் வெளிப்படை உண்மைகள். இந்த வெளிப்படையாகவும், தெளிவாகவும் தெரியும் உண்மைகள் ஒரு போராட்டத்தை முன்னெடுப்பதில் புலிகளைப் புரிந்து கொள்வதற்குப் போதுமானவை. எளிமையான விடயங்களை கடுமையான சொற்களுக்கூடாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பது மார்க்ஸியமாகாது. மாறாக எளிமையாகத் தெரியும் விடயங்களில் காணப்படும் சிக்கலான அம்சங்களை ஆராய முனைவதே மார்க்ஸிய அணுகுமுறை.

• கரிகாலன்

எல்சல்வடோரில் (Elsalvador) 12 வருடகாலமாக 80,000 உயிர்களை பலியெடுத்துவந்த உள்நாட்டு யுத்தமானது சனவரி நடுப்பகுதியில் நடந்த ஐ.நா நிறுவனத்தின் சமாதான உடன்படிக்கையுடன் முடிவுக்கு வருகிறது. இந்த யுத்தமானது,5 இலட்சம் அகதிகளை அமெரிக்காவிற்கு அனுப்பியதுடன் 2 மில்லியார்டன் பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தியது. சல்வடோனிச அரசிற்கும், F.L.N கொரில்லாக்களுக்குமிடையிலான இந்த ஒப்பந்தம் நீண்டகால பிரச்சனை எதற்கும் முடிவுதரவில்லை.

<< 1000 பலமான ஐ.நா சமாதான துருப்புகள் பெப். 1 இற்குள் இருதரப்பையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நிலை நிறுத்தப்படுவர். >>

<< முக்கியமாக ஒக். 31 இற்குள் கொரில்லாக்கள் யாவரும் நிராயுதபாணியாக்கபடுவர். 2 வருடகாலத்திற்குள் அரசபடைகளின் எண்ணிக்கை (63,175) அரைவாசியாக்கப்படுவர். >>

<< அத்துடன் அமெரிக்காவிலுள்ள எல்சல்வடோர் பிரசைகளுக்கும் பொதுமன்னிப்பு கொடுத்து, யூன். 30 இற்குள் திரும்புமாறு அறிவித்துள்ளது. அமெரிக்காவின் நோக்கமும் அவர்களை திருப்பியனுப்புவதுதான் >> ஆயினும் எல்சல்வடோர் பெற்றோர்கள் தமது குழந்தைகள் நாடு திரும்புவதை விரும்பவில்லை. "இங்கு வந்து என்ன செய்வது" என்கிறார்கள்.

-எங்களுடைய முக்கிய ஏற்றுமதி கோப்பியல்ல மாறாக மனித உழைப்பு- என்கிறார் எல்சல்வடோர் பிரசை ஒருவர்.

எல்சவடோர் அகதிகள் வருடத்திற்கு 500 mil-1000 mil $ வரை எல்சவடோருக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தகது.

(மனிதம். தை-சித்'92)

www.tamilarangam.net

(27 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்தான்; ஒன்றும் பிரயோசனம் இல்லை. ஏமாற்றத்தாலும் பசியாலும் அவன் அழ ஆரம்பித்தான்.

சாயந்திரம் லட்சுமி சட்டி பானைகளைத்தேய்த்துக் கழுவிக்கொண்டிருந்தாள். சீனிவாசன் முகத்தில் ஆவல் துடிக்க, மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஓடி வந்தான். ''அக்கா அக்கா நம்ம பள்ளிக் கூடத்துக்குப் பக்கத்திலே சாவடி இருக்கு பாரு. அதுக்குப் பின்புறம் நம்ம வீட்டு கதவு இருக்கக்கா! கண்ணாணை, நான் பாத்தேன்'' என்றான்.

''அப்படியா! நிஜமாகவா? எங்கே வா பாப்போம்'' என்று சீனிவாசனின் கையைப் பிடித்தாள், இருவரும் கிராமச் சாவடி நோக்கி ஓடினார்கள்.

உண்மைதான். அதே கதவு சாத்தப்பட்டு இருந்தது. தூரத்திலிருந்தே தங்கள் நண்பனை இனம் கண்டு கொண்டார்கள் அச் சிறுவர்கள். பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா எனச் சுற்றும் முற்றும் பார்த்தார்கள். ஒருவரும் இல்லை.

அவர்களுக்கு உண்டான ஆனந்தத்தைச் சொல்ல முடியாது. அங்கே முளைத்திருந்த சாரணத்தியும் தைவாழைச் செடிகளும் அவர்கள் காலடியில் மிதிபட்டு நொறுங்கின. அதிவேகமாய் அந்தக் கதவின் பக்கம் பாய்ந்தார்கள். அருகில் போய் அதைத்தொட்டார்கள். தடவினார்கள். அதில்பற்றி இருந்தகரையான் மண்ணை லட்சுமி தன் பாவாடையால் தட்டித் துடைத்தாள்.

கதவோடு தன் முகத்தை ஒட்ட வைத்துக்கொண்டாள். அழவேண்டும்போல் இருந்தது அவளுக்கு! சீனிவாசனை கட்டிப் பிடித்துக்கொண்டாள். முத்தமிட்டாள். சிரித்தாள். கண்களிருந்து கண்ணீர் வழிந்தோடியது. சீனிவாசனும் லட்சுமியைப் பார்த்துச் சிரித்தான். அவர்கள் இருவரின் கைகளும் கதவைப் பலமாகப் பற்றி இருந்தன.

தாமரை
ஜனவரி 1959

(அன்னம்)



OOOOOOOOOOOOOO

# கதவு

OOOOOOOOOOOOOO

கி.ராஜநாராயணன்

கதவு ஆட்டம் ஆரம்பமாகியது.

பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் ஆரவாரத்தோடு கலந்து கொண்டார்கள்.

''எல்லாரும் டிக்கட்டு வாங்கிக்கிடுங்க'' என்றான் சீனிவாசன். உடனே ''எனக்கொரு டிக்கட், உனக்கொரு டிக்கட்'' என்று சத்தம் போட்டார்கள்.

''எந்த ஊருக்கு வேணும்? ஏய்...இந்த மாதிரி இடிச்சித் தள்ளினா என்ன அர்த்தம்...அப்புறம் நான் விளையாட்டுக்கு வரமாட்டேன்''.

''இல்லை, இல்லை, இடிச்சித் தள்ளலெ.''

''சரி எந்த ஊருக்கு டிக்கட் வேணும்?''

குழந்தைகள் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டார்கள். ஒருவன் ''திருநெவேலிக்கு'' என்று சொன்னான். ''திருநெவேலிக்கு, திருநெவேலிக்கு'' என்று கூப்பாடு போட்டுச் சொன்னார்கள் எல்லோரும்.

லட்சுமி ஒரு துணியால் கதவைத் துடைத்துக்கொண்டிருந்தாள். சீனிவாசன் வெறுங்கையால் டிக்கட்கிழித்துக் கொடுத்து முடித்ததும், கதவில் பிடித்துத் தொத்திக் கொண்டார்கள். சிலர் கதவை முன்னும் பின்னும் ஆட்டினார்கள். தன்மீது ஏறி நிற்கும் அக்குழந்தைகளை, அந்த பாரமான பெரிய கதவு பொங்கிப் பூரித்துப்போய் இருக்கும் அக்குழந்தைகளை, வேகமாக ஆடி மகிழ்வித்தது. ''திருநெவேலி வந்தாச்சி'' என்றான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சீனிவாசன். எல்லோரும் இறங்கினார்கள். கதவைத் தள்ளியவர்கள் டிக்கட் வாங்கிக்கொண்டார்கள். ஏறின வர்கள் தள்ளினார்கள், மீண்டும் கதவாட்டம் தொடங்கியது.

O

அது பழைய காலத்துக் காரை வீடு. பெரிய ஒரே கதவா கப் போட்டிருந்தது. அதில் வசித்து வந்தவர்கள் முன்பு வசதி உள்ளவர்களாக வாழ்ந்தவர்கள். இப்பொழுது ரொம்பவும் நொடித்துப்போய்விட்டார்கள். அந்த வீட்டிலுள்ள குழந்தைகளில் மூத்ததற்கு எட்டு வயது இருக்கும்; இன்னொரு கைக்குழந்தை.

அம்மா காட்டுக்கு வேலை செய்யப் போய்விடுவாள். அப்பா மணிமுத்தாறில் கூலிவேலை செய்யப் போய்விட்டார். லட்சுமியும் சீனிவாசனும் கைக்குழந்தையை அம்மா காட்டிலிருந்து வரும்வரை வைத்துக்கொண்டு கதவோடு விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

O

ஒரு நாள் தெருவில் ஒரு தீப்பெட்டிப் படம் ஒன்றை லட்சுமி கண்டெடுத்தாள். படத்தில் ஒரு நாய் இருந்தது. அழுக்காக இருந்ததால் படத்தில் எச்சிலைத் துப்பி தன் பாவாடையால் துடைத்தாள். இதனால் சில இடங்களில் இருந்த அழுக்கு படம் பூராவும் பரவிற்று. ஆனால் லட்சுமிக்கு மிகவும் திருப்தி, படம் சுத்தமாகிவிட்டது என்று.

படத்தை முகத்துக்கு நேராகப் பிடித்து, தலையைக் கொஞ்சம் சாய்த்துக்கொண்டு பார்த்தாள். அப்புறம் இந்தப் பக்கமாகச் சாய்த்துக்கொண்டு பார்த்தாள். சிரித்துக் கொண்டாள். காண்பிக்க பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா என்று சுற்றும் முற்றும் பார்த்தாள். ஒருவரும் இல்லை. வீட்டை நோக்கி வேகமாக நொண்டி அடித்துக் கொண்டே போனாள், சந்தோஷம் தாங்க முடியாமல்.

லட்சுமி வீட்டுக்கு வந்தபோது சீனிவாசன் நாடியைக் கையில் தாங்கிக்கொண்டு வாசல்படிக்கட்டில் உட்கார்ந்திருந்தான். அவனைக் கண்டதும் லட்சுமி படத்தை பின்புறமாக மறைத்துக்கொண்டு, ''டேய் நா என்ன கொண்டு வந்திருக்கேன் சொல்லுபாப்போம்'' என்றாள்.

''என்ன கொண்டு வந்திருக்கியோ? எனக்குத் தெரியாது''

''சொல்லேன் பாப்போம்.''

''எனக்குத் தெரியாது''

லட்சுமி தூரத்தில் இருந்தவாறே படத்தைக் காண்பித்தாள்.

''அக்கா அக்கா, எனக்குத் தரமாட்டியா'' என்று, கேட்டுக்கொண்டே இறங்கி வந்தான் சீனிவாசன். 'முடியாது' என்ற பாவனையில் தலையை அசைத்து படத்தை மேலே தூக்கிப் பிடித்தாள். சீனிவாசன் அவளைச் சுற்றிச் சுற்றி வந்தான். ''ம்ஹூம், முடியாது. மாட்டேன்... நான் எவ்வளவு கஷ்டப்பட்டுத் தேடி எடுத்துக்கொண்டு வந்திருக்கேன் தெரியுமா?'' என்றாள்.

''ஒரே தடவை பாத்துட்டுக் கொடுத்துர்றேன். அக்கா, அக்கா'' என்று கெஞ்சினான்.

''பாத்துட்டுக் கொடுத்துறணும்''

''சரி''

''கிழிக்கப்படாது''

''சரி சரி''

சீனிவாசன் படத்தை வாங்கிப் பார்த்தான். சந்தோஷத்தினால் அவன் முகம் மலர்ந்தது.

''டேய் உள்ளெ போய்க் கொஞ்சம் கம்மஞ்சோறு கொண்டா, இந்த படத்தை நம்ம கதவிலெ ஒட்டணும்'' என்றாள்.

''ரொம்ப சரி'' என்று உள்ளே ஓடினான் சீனிவாசன்.

இரண்டு பேருமாகச் சேர்ந்து கதவில் ஒட்டினார்கள். படத்தைப் பார்த்து சந்தோஷத்தினால் கைதட்டிக் கொண்டு குதித்தார்கள். இதைக் கேட்டுப் பக்கத்து

www.tamilarangam.net

வீட்டுக் குழந்தைகளும் ஓடிவந்தன. மீண்டும் கதவு ஆட்டம் தொடங்கியது!

O

அந்தக் கதவைக் கொஞ்சம் கவனமாகப் பார்க்கிறவர்களுக்கு, இந்தக் குழந்தைகள் ஒட்டிய படத்துக்குச் சற்று மேலே இதே மாதிரி வேறு ஒரு படம் ஒன்றை ஒட்டி இருப்பது தெரியவரும் அந்தப்படம்ஒட்டி எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டதால், அழுக்கும் புகையும் பட்டு மங்கிப் போய் இருந்தது. ஒரு வேளை அது லட்சுமியின் தகப்பனார் குழந்தையாக இருக்கும்போது ஒட்டியதாக இருக்கலாம்.

குழந்தைகள் இப்படி விளையாடிக்கொண்டிருக்கும் போது கிராமத்துத் தலையாரி அங்கே வந்தான்.

''லட்சுமி உங்க ஐயா எங்கே?''

''ஊருக்குப் போயிருக்காக''

''உங்க அம்மா?''

''காட்டுக்குப் போயிருக்காக''

''வந்தா, தீர்வையைக்கொண்டு வந்து போடச்சொல்லு. தலையாரித் தேவரு வந்து தேடீட்டுப் போனாருன்னு சொல்லு''

''சரி'' என்ற பாவனையில் லட்சுமி தலையை ஆட்டினாள்.

O

மறுநாள் தலையாரி லட்சுமியின் அம்மா இருக்கும் போதே வந்து தீர்வைப் பாக்கியைக் கேட்டான்.

''ஐயா, அவரு ஊரிலே இல்லை. மணிமுத்தாறு போயி அஞ்சி மாசமாச்சி. ஒரு தகவலையும் காணோம். மூணு வருசமா மழை தண்ணி இல்லையே. நாங்க என்னத்தை வச்சு உங்களுக்குத் தீர்வைப் பாக்கியைக் கொடுப்போம்? ஏதோ காட்டிலே போய்க் கூலி வேலை செய்து இந்தக் கொளந்தைகளைக் காப்பாத்ரதே பெரிய காரியம்; உங்களுக்கு தெரியாததா?'' என்றாள்.

இந்த வார்த்தைகள் தலையாரியின் மனசைத் தொடவில்லை; இந்த மாதிரியான வசனங்களை பலர் சொல்லிக் கேட்டவன் அவன்.

''நாங்கள் என்ன செய்ய முடியும்மா இதுக்கு; இந்த வருசம் எப்படியாவது கண்டிப்பா தீர்வைபோட்டறணும். அப்புறம் எங்கமெலே சடைச்சிப் புண்ணியம் இல்லை'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

O

ஒரு நாள் காலை. வீட்டின் முன்னுள்ள மைதானத்தில் குழந்தைகள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். தலையாரி, நான்கு பேர் சகிதம் வீட்டை நோக்கி வந்தான். வந்தவர்கள் அந்தக் கதவைத் தூக்கிக் சுழற்ற முயன்றார்கள்; முடியவில்லை. குழந்தைகள் வீட்டுப் பக்கம் ஓடிவந்து பார்த்தார்கள். அவர்களுக்கு இது ஒரு வேடிக்கையாக இருந்தது. தலையாரியும் சேர்ந்து பிடித்து ஒரு மாதிரி கழற்றி, நான்கு பேரும் கதவைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு புறப்பட்டார்கள். அந்தக் குழந்தைகளுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. அதை ஒரு ஊர்வலம் என்று நினைத்தார்களோ தெரியவில்லை. ஒருவன் நாதஸ்வரம் வாசிப்பவனைப்போல் கைகளை வைத்துக்கொண்டு ''பிப்பீ... ...பீ...பீ'' என்று சத்தம் கொடுத்தான். இன்னொருவன் இரண்டு கைகளாலும், ஆள்காட்டி விரல்களை நீட்டிக் கொண்டு, உடலைப் பின் வளைத்துத் துடைகளின் மேல் ஓங்கி அடிப்பதாக பாவனை செய்து ''திடும்...திடும்... ததித்தண... ததிக்குண'' என்று தவுல் வாசிப்பவனைப் போல் முழங்கினான். சீனிவாசனும் இதில் பங்கெடுத்துக் கொண்டான். இப்படி உற்சாகமாக குழந்தைகள் கதவைத் தூக்கிக்கொண்டு செல்கிறவர்களின் பின்னே ஊர்வலம் புறப்பட்டார்கள்.

தலையாரியால் இதைச் சகிக்க முடியவில்லை. ''இப்போ போகிறீர்களா இல்லையா கழுதைகளே'' என்று கத்தினான். குழந்தைகள் ஓட்டம் பிடித்தன.

அவர்கள் வீட்டுக்குத் திரும்பி வரும்போது லட்சுமி வாசல் படியில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். எல்லோரும் அரவம் செய்யாமல் அவளுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டனர். ஒருவரும் ஒன்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேசவில்லை. சீனிவாசனும் முகத்தை வருத்தமாக வைத்துக்கொண்டான் இப்படி வெகுநேரம் அவர்களால் இருக்க முடியவில்லை. சற்செயலாக ஒரு பெண், ''நான் வீட்டுக்குப் போறேன்'' என்று எழுந்தாள். உடனே எல்லோரும் அங்கிருந்து புறப்பட்டுப் போய்விட்டார்கள். லட்சுமியும் சீனிவாசனும் மாத்திரம் அங்கிருந்தார்கள். வெகுநேரம் அவர்களும்ஒருவருக்கொருவர் பேசவில்லை.

கைக்குழந்தை அழும் குரல் கேட்கவே லட்சுமி உள்ளே திரும்பினாள். இதற்குள் சீனிவாசன் அக்குழந்தையை எடுத்துக்கொள்ளப் போனான். குழந்தையைத் தொட்டதும் கையைப் பின்னுக்கு இழுத்தான். அக்காவைப் பார்த்தான். லட்சுமியும் பார்த்தாள்.

''பாப்பாவைத் தொட்டுப்பாரு அக்கா; உடம்பு சுடுது'' என்றான். லட்சுமி தொட்டுப் பார்த்தாள்; அனலாகத் தகித்தது.

சாயந்திரம் வெகுநேரம் கழித்து அம்மா தலையில் விறகுச் சுள்ளிகளுடன் வந்தாள். சுள்ளிகள் சேகரிக்கும் போது கையில் தேள் கொட்டி இருந்ததால் முகத்தில் வலி தோன்ற அமைதியாக வந்து குழந்தைகளின் பக்கம் அமர்ந்து கைக்குழந்தையை வாங்கிக் கொண்டாள். 'உடம்பு சுடுகிறதே?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள். இதற்குள் குழந்தைகள் காலையில் நடந்த சேதியை அம்மாவிடம் சொன்னார்கள்.

செய்தியைக் கேட்டதும் ரங்கம்மாவுக்கு மூச்சே நின்று விடும் போலிருந்தது; உடம்பெல்லாம் கண்ணுக்குத் தெரியாத ஒரு நடுக்கம் பரவியது. அவள்விடும் சுவாசத்தின் வெப்பம் அதிகமாகியது. வயிற்றில் தாங்க முடியாத ஒரு வலி தோன்றியதுபோல், குழந்தையை இறுகப் பிடித்துக்கொண்டாள். குழந்தைகளுக்கு முன் அழக் கூடாது என்று எவ்வளவுதான் அடக்கினாலும் முடியவில்லை. ''என்னைப் பெத்த தாயே'' என்று அலறிவிட்டாள். பயத்தினால் குழந்தைகள் அவள் பக்கத்திலிருந்து விலகிக்கொண்டார்கள். இனம் தெரியாத காரணத்தினால் அவர்களும் அழ ஆரம்பித்தனர்.

O

மணிமுத்தாறிலிருந்து ஒரு தகவலும் வரவில்லை.

நாட்கள் சென்றுகொண்டே இருந்தன. இரவு வந்துவிட்டால் குளிர் தாங்க முடியாமல் குழந்தைகள் நடுங்குவார்கள்; கதவு இல்லாததால், வீடு இருந்தும் பிரயோஜனமில்லாமல் இருந்தது. கார்த்திகை மாசத்து வாடை, விஷக்காற்றைப் போல் வீட்டினுள் வந்து வந்து அலை மோதிக் கொண்டே இருந்தது கைக் குழந்தையின் ஆரோக்கியம் கெட்டுக் கொண்டே வந்தது. ஒரு நாள் இரவு வாடை தாங்காமல் அது அந்த வீட்டை விட்டு அவர்களையும் விட்டுப் பிரிந்து சென்று விட்டது. ரங்கம்மாளின் துயரத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. லட்சுமிக்காகவும், சீனிவாசனுக்காகவுமே அவள் உயிர் தரித்திருந்தாள்.

O

சீனிவாசன் இப்பொழுது பள்ளிக்கூடம் போகிறான். ஒருநாள் அவன் மத்தியானம் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்புபோது ஒரு தீப்பெட்டிப்படம் கிடைத்தது. கொண்டுவந்து தன் அக்காவிடம் காண்பித்தான். லட்சுமி அதில் ஆர்வம் கொள்ளவில்லை,

''அக்காஎனக்கு சீக்கிரம்கஞ்சி ஊத்து, பசிக்கி; சாப்பிட்டு இந்தப் படத்தை ஒட்டனும்''

''தம்பீ, கஞ்சிஇல்லை'' இதை அவள் மிகவும் பதட்டத்தோடு சொன்னாள்.

''ஏன்! நீகாலையில் காய்ச்சும்போது நான்பாத்தேனே'

'ஆம்' என்ற முறையில் தலையசைத்து விட்டு, ''நான் வெளிக்குப் போயிருந்தேன். ஏதோ நாய் வந்து எல்லாக் கஞ்சியும் குடித்துவிட்டுப் போய்விட்டது தம்பி... கதவு இல்லையே'' என்றாள் துக்கமும் ஏக்கமும் தொனிக்க. தன்னுடைய தாய் பசியோடு காட்டிலிருந்து வருவாளே என்று நினைத்து உருகினாள் லட்சுமி.

சீனிவாசன் அங்கே சிதறிக்கிடந்த கம்மம் பருக்கைகளை எடுத்து படத்தின் பின்புறம் தேய்த்து ஒட்டுவதற்கு வந்தான். கதவு இல்லை. என்னசெய்வதென்றே தெரியவில்லை. சுவரில்ஒட்டினான். படம்கீழேவிழுந்துவிட்டது. அடுத்த இடத்தில், அடுத்த சுவரில், எல்லாம் ஒட்டிப்

(தொடர்ச்சி 24ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மலையகக் கல்வியின் சமகாலப் பிரச்சினைகளும் அது தொடர்பான எதிர்காலத் தேவைகளும்

மலையகக் கல்வியின் வரலாற்றுநூல் பெரும்பாலும் மாறுபட்ட சாத்தியங்களையும், பாக்ங்களையும் கொண்டமைந்தது. தேசிய நோக்கு, சர்வதேச நோக்கு என்னும் வரைபுகளையுடையச் சித்தாங்கள் அத்தியாயங்களில் மிகக் குறைவான தசாப்தங்களிலேயே அனுபவித்த அம்சங்களை காட்டுகின்றன. ஆகவே சமகால மலையகக்கல்வி என்னும்போதும், அதன் பிரச்சினைகளை இனங்காணும்போதும் வெளிப்படையாகத் தெரியும். 'ஓர் உண்மை ஓட்டப்பந்தயத் திடலில் தேசிய வீரன் ஒருவனையும், கால் ஊனமடைந்த நொண்டி ஒருவனையும் ஓடவிட்டுப் பார்ப்பது[1] போன்றதாகும்.' ஆனாலும் நொண்டிக்கும் ஒரு வாழ்வு உண்டு. அங்கும் சில வசந்தங்கள், வரட்சிகள் தடவிச் செல்லும் தென்றல்கள், தூக்கியெறியும் சூறாவளிகள் இல்லாமல் இல்லை. இப்படி பார்க்கும்போது மலையகக் கல்வியின் சமகாலப் பிரச்சினைகளை இரண்டு கோணங்களில் இனங்காணலாம்.

1. இலங்கை போன்ற 3ம் மண்டல நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்
2. மலையகக் கல்விக்கேயுரிய தனித்துவமான பிரச்சினைகள்.

பொதுப் பிரச்சினைகள் என்னும்போது மனிதவளத்தை சிறப்பான நிலைக்கு உயர்த்துவதற்கான 'அனைவருக்கும் கல்வி' என்னும் கொள்கை, முதலீட்டு அருமை, கல்வி வெளியீட்டின் எதிர்பார்ப்புகள் என்பன அடங்குகின்றன. இவை தேசியம், மலையகம் இரண்டிற்கும் பொதுவானவை. ஆனால் சமகால மலையகக் கல்வியில் கடந்த இரண்டு தசாப்த கட்டங்களில் தோன்றியுள்ள பிரச்சினைகள் பின்வருமாறு அமைகின்றன.

1. நீண்டகால கல்விப் புறக்கணிப்பில் அமைந்த தெறிப்பு.
2. வளங்களின் பங்கீட்டுப் பின்னுரிமை.
3. கல்வி பற்றிய மனப்பாங்கும் போக்குகளும்.
4. ஆரம்ப, இடைநிலை, உயர்நிலைக் கல்விக் கட்டங்களுக்கிடையில் மாற்றீடு செய்யப்படும் மனிதவள வீதம்.

ஏறத்தாள ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஒரு தனித்துவமான அந்நியப்படுத்தல் போக்கில் நிகழ்ந்துவந்த மலையகக் கல்வி 1977ம் ஆண்டின் பின்னர் தேசிய நியதிகளுக்கு அமைந்த போக்குகளுக்கு உட்படுத்தப்பட்ட வேகம் மலையகக் கல்வியில் ஒரு வெளிப்பாடாக அமைந்தது. இதனால் பல சாதக பாதக விளைவுகள் தோன்றியுள்ளன. அடிப்படை நியதிகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படாமல் ஏற்படுத்தப்பட்டது. இந்த வெளிப்பாட்டுக்கு காரணமாகும்.

மலையகக் கல்வியை பொறுத்தமட்டில் வளங்களின் பங்கீட்டில் ஏற்கனவே இருந்துவந்த தேசியபோக்கு தொடர்ந்தும் இருந்து வருகிறது. 'வாயுள்ள பிள்ளை பிளைக்க கடவது' என்னும் போக்கால் கல்வி மூலவளம், முதலீடுகள் மலையகக் கல்விக்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிறுவனங்கள் என்பன மிகவும் குறைவாகவோ அல்லது காலம் பிந்தியோ வழங்கப்படுகின்றன. இதனால் ஏனையோர் இறுதிக் கோட்டைத் தாண்டி வெற்றி ஆர்ப்பாட்டம் செய்யும்போது மலையகம் ஆரம்பக்கோட்டில் வந்து நிற்பது போன்ற நிலை கவலைக்குரியது.

மலையகக் கல்வியில் அக்கறையுள்ளோரின் 'மனப்பாங்கு' என்னும் தலைப்பு முக்கிய இடம்வகிக்கின்றது. இந்த மனப்பாங்கு பல தரப்பட்ட அமைப்புக்களின் வெளிப்படுத்தல்களையும், கருத்துக்களையும் உள்ளடக்கியதாகும். இதனை அரசு மனப்பாங்கு, சமூக மனப்பாங்கு, ஆசிரிய மனப்பாங்கு மாணவ மனப்பாங்கு, பெற்றோர் மனப்பாங்கு என்று ஐந்து கட்டங்களாகப் பிரிக்கலாம். எத்தனை வெளிமாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டாலும் சம்பந்தப்பட்ட நியதிகளில் மனப்பாங்கு அதற்கமைய விருத்தி பெறாமல் இருப்பது கல்வி முதலீட்டில் பெரும் விரயக் குறிக்காட்டியாக அமைகிறது.

இறுதியாக, சர்வதேச கல்வி விளக்கம் அல்லது எழுத்தறிவுத்திறன் என்னும் இரு இலக்கை அடிப்படையாகக்கொண்ட ஆரம்பக்கல்வியில் இருந்து கனிட்ட இடைநிலைக்கும் அதிலிருந்து உயர் இடைநிலைக்கும் பின்னர் கல்லூரித் தகைமைக்கும் மாற்றம் பெற்றுச்செல்லும் வீதம் ஏனைய சமூகங்களின் வீத நிலைமையை விட மிகக் குறைவாக இருக்கிறது. இதனால் 'கல்வியின் மூலம் சமுதாய மாற்றம்' என்னும் இலட்சிய இலக்கு மலையகத்தை பொறுத்தமட்டில் வெகுதூரத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

உதாரணமாக, மலையகக் கல்வியில் ஆரம்ப பாடசாலைக் கல்விக்குள் நுழைந்த மாணவர்களில்:

60% ஆரம்ப மேற்பிரிவுக்கும்

அதில் 45% கனிட்ட இடைநிலைக்கும்

அதில் 50% சிரேட்ட இடைநிலைக்கும்

மாற்றீடு செய்யப்படுகின்றார்கள். ஆகவே மொத்த பாட அனுமதித் தொகையில் 13% மட்டுமே சிரேட்ட இடை நிலை வாய்ப்பைப் பெறுகின்றனர். இதில் மிகக் கணிசமான தொகையினரே கல்லூரிமட்டக் கல்வியில் காலடி வைக்கின்றனர். இந்த நிலைமைக்கு ஆய்வுகளின்படி பின்வரும் தன்மைகள் காரணமாகின்றன. பாடசாலைகளில் மாணவரின்

1. பங்குபற்றல் வீதம் குறைவு

2. கல்வியை நிறுத்துவோர் வீதம் அதிகம்

3. மீளக்கற்போரின் தொகை வீதம் உயர்வு.

இதனால் இன்னும் தொடர்ந்து பல தசாப்தங்களுக்கு மலையகத்தின் எழுத்தறிவு வீதம் 85% க்குள் அடக்கப்பட்டதாகவே இருக்கும். இதற்கு விரைவானதும், வேகமானதுமான பல முயற்சிகள் எடுக்கப்படல் வேண்டும். அரசுக்கொள்கையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சில சிறப்புரிமைகள் மலையகக் கல்விக்கு வழங்கப்பட வேண்டும். கல்வியின் சமகாலப் பிரச்சினையில் தலையாயப் பிரச்சினையான 'ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மனப்பாங்கு தொடர்பான ஒரு பொதுப்பார்வை அல்லது ஒரு பொது நியதிக்கட்டமைப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். சமுதாயம் பாடசாலையின் பங்குதாரர் என்ற நிலை உருவாக்கப்படல் வேண்டும். கல்வி இலக்குகள் சரியாக வரையறை செய்யப்பட்டு அதற்கு ஏற்ப மனித வளங்களை தகுதிப்படுத்தும் பயிற்சிக் களங்கள் உருவாக்கப்படவேண்டும். இதற்காக ஒரு பத்தாண்டு துரித வேலைத்திட்டத்தை நாம் அனைவரும் கூடி வடிவமைத்தல் வேண்டும்.

(அறிவியல் அரங்கம், 2/92)

---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றைக் காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்று இப்போதும் நம்பிக்கையூட்டுகின்ற அரசியல் அமைப்புக்களின் செல்வாக்கின் மூலமாகவே யுத்தத்தில் மந்த நிலை இடைக்கிடை ஏற்படுகின்றது.

ஆனால் இப்போது தம்முடைய யுத்த தந்திரோபாயத்தில் அரசியல் தலையீடுகள் இருப்பதனை ராணுவம் கருணையுடன் பார்க்காது என்றே தோன்றுகின்றது.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களைய ராணுவத்தை தொடர்ந்து அனுமதிப்பதுதான் அரசின் கொள்கை என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். புலிகளிடம் ஆயுதக் களைவு என்பது யுத்தம் தொடரும் என்பதையே குறிக்கும்.

ஆனால் இது எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும்? இதற்கான விடையையே எல்லோரும் பெற விரும்புகின்றார்கள்.

**'எவ்வளவு காலத்திற்கு இந்த யுத்தம் தொடரும்?' இதுதான் இன்று எல்லோரும் கேட்கும் கேள்வி. ஆனால் இதற்கு விடைதான் ஒருவருக்கும் தெரியவில்லை!**

ஆனால் இதற்கு எவராலும் பதிலளிக்க முடியாதுள்ளது.

குடா நாட்டைக் கைப்பற்றுவதற்காக ராணுவம் மேற்கொள்ளும் எந்த ஒரு நடவடிக்கையும் நீண்டதாகவும் கடுமையானதாகவுமே இருக்கும். இரண்டு தரப்பினரும் அதனைத் தெரிந்தே வைத்துள்ளனர்.

ஆனால் தற்போதைய நிலைமையில் இரு தரப்பினரும் ராணுவ தீர்வொன்றுக்கு முதலிடம் கொடுப்பவர்களாகவே காணப்படுகின்றனர்.

பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வொன்றே இப் பிரச்சினைக்கு சரியான ஒரு தீர்வாக அமைய முடியும். ஆனால் வடக்கு – கிழக்கு இணைப்பு விவகாரத்தால் தெரிவுக்குழு எதனையும் செய்ய முடியாத ஒரு நிலையில் உள்ளது. இவ்வாறான ஒரு அரசியல் தீர்வு காணல் நீராகி விடுமா என்ற அச்சத்தையே அனைவருக்கும் ஏற்படுத்தி உள்ளது.

– [illegible]

(வீரகேசரி )

**'புலிகளின் ஆயுதங்கள் அனைத்தும் களையப்படும் வரை ராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும்.'**

தவிர்க்க முடியாத நேர நெருக்கடி காரணமாக யூன் மாத இரவல் தூண்டில் தாமதமாகியதுடன், ஒகஸ்ட் மாதத்திற்குரியதாகவும் இணைந்து வருகிறது. இச் சீரற்ற நிலைக்காக வருந்துகிறோம்.

— கடலோடிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்